Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி- 19 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 றஜபு 29 (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:339



மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்
முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை
குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

## பிரதமர் மஹிந்தவின் நடவடிக்கையில் அதிருப்தி:

# சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவை இன்று அவசரமாகக் கூட்டுகிறார் சந்திரிகா!



கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் அண்மைக்கால அரசியல் நகர்வுகள் குறித்து கடும் விசனமடைந்துள்ள ஜனாதிபதி சந்திரிகா - இன்று அவசர அவசரமாக கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி மீண்டும் கூட்டணி சேர்வதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஜனாதிபதி சந்திரிகா - இது தொடர்பாக உறுதி மொழி பெற்ற பின்னரே கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்தராஜபக்ஷவை தெரிவு செய்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த காலத்தில் ஜே.வி.பியுடன் பேச்சு நடத்திய மகிந்த ராஜபக்ஷ இணக்கப்பாடு ஒன்றை எட்டியுள்ளார்.

தான் நாட்டில் இல்லாத வேளை கட்சியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களுக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றனவாம்!

### ஜனாதிபதி சந்திரிகா சொல்கிறார்

கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சீனாவுக்கான பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா - அந்த நாட்டுத் தொலைக்காட்சியான சி.சி.டிவிக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

10 ஆண்டுகளுக்கு முன்னர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கவைத் தாக்க 1000 புலிகள் பயிற்சியாம்!

### சிங்களப் பத்திரிகை கூறுகிறது

கொழும்பு —

கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் விமானப்படை மற்றும் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் பயிற்சி பெற்று வருவதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


புத்தளம் - இரணவில் பிரதேச காட்டுப் பகுதியில் இவர்கள் விசேட பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக சந்தேகிக்கக் கூடிய தகவல்கள் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இலங்கை விமானப் படையில் பணியாற்றிய முன்னாள் தமிழ் அதிகாரி ஒருவரே இவர்களுக்கு பயிற்சியளிப்பதாகத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துணைப் படைகளின் நடவடிக்கைகளே சமாதான முயற்சிகளைப் பாதிக்கின்றன!

### கண்காணிப்புக் குழுவிடம் இளந்திரையன்



மட்டக்களப்பு —

துணைப்படைகளின் இருப்பும் அவர்களின் ஆயுதச் செயற்பாடுகளும் தற்போதைய அமைதி முயற்சிக்கு எதிரிகள் என்பதை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குரியது என - கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் கண்காணிப்புக்குழுவினருடன் நடைபெற்ற அவசர சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் கூடத்தில்

## நோர்வேயில் ஆட்சி மாறினாலும்

# மகிந்தவின் கூட்டத்தில் தமிழ்ப் பெண் கைது!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நடத்திய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடியதாகத் தமிழ்ப் பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

புத்தளம் - ஆனமடுவ பிரதேசத்தில் மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்தத் தமிழ்ப் பெண் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

41 வயதான இந்தப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயில் ஆட்சி மாறினாலும் மத்தியஸ்தர் பணி பாதிக்காது!

## தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு

இந்த மாதம் நோர்வே நாடாளுமன்றத்துக்கு நடைபெறவுள்ள தேர்தலால் இலங்கை சமாதான முயற்சிகளின் அனுசரனையாளார் பணி எந்த வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது என்று கொழும்பிலுள்ள நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ள நிலையில் - நோர்வே நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் மேலும் நிலைமையை சிக்கலாக்கும் என்று கருதப்படுவது குறித்து நோர்வே தூதரகப் பேச்சளார் மேலும் தெரிவிக்கையில்:-

நோர்வே நாடாளுமன்றத் தேர்தலால் ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டாலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தேர்தலில் ஈழத் தமிழரும் போட்டி!

கொழும்பு

நோர்வே நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற் கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளர் பட்டியலில் ஈழத் தமிழரான பாலசிங்கம் யோகராஜாவின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு நோர்வே நகர சபைத் தேர்தலில் - நோர்வே தமிழ்மக்களின் பிரதிநிதியாக தொழிற்கட்சி உறுப்பினரான பாலசிங்கம் யோகராஜா (பாஸ்கரன்) போட்டியிட்டு ஒஸ்லோ வாழ் தமிழ்மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றிபெற்றார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத்தின் ஏகபிரதிநிதியாக ஏற்றுக்கொண்டாலே ஆதரவு!

## மகிந்தவுக்கு தொண்டமான் தெரிவிப்பு



கொழும்பு

மலையகத்தின் ஏகப்பிரதிநிதியாக தன்னை ஏற்றுக்கொள்ளவேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் - பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை கடந்தவாரம் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே ஆறுமுகம் தொண்டமான் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலக்கத் தகடற்ற வாகனத்தில்

# அலரி மாளிகைக்குச் சென்ற ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள்!

கொழும்பு

இலக்கத்தகடற்ற வாகனமொன்றில் ஜே.வி.பியின் மூன்று சிரேஷ்ட தலைவர்கள் கடந்த புதன்கிழமை இரவு அலரிமாளிகைக்கு இரகசிய விஜயம் மேற்கொண்டமை தொடர்பாக கொழும்பில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக சிங்களப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

கடந்த புதன்கிழமை இரவு 8.55 மணிக்கு ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க, (12 ஆம் பக்கம் பார்க்க)

# உடனடியாக அரசும் புலிகளும் பேச்சைத் தொடங்கவேண்டும்!

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொழும்பு

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம் பிப்பது தொடர்பாக - இருதரப்பினரும் காலம் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளனர்.

அரசும் புலிகளும் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக போர்நிறுத்தக் (12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1. ஓ.பி.டி [O.P.D] 2. ஆய்வுகூடம் 4. கிளினிக் 5. பார்மசி 5. உடற்பயிற்சி [நோயாளர்களுக்கு]

(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


தொலைபேசி: 021-222 8144

ஆலோசனை நேரம்:

(திங்கள் - சனி) காலை 6.00- இரவு 9.00 வரை

ஞாயிறு காலை 6.00 - காலை 10.00

மாலை 5.00 - இரவு 9.00



# நல்லூரில் இன்று

மானிப்பாய்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இன்று மாலை பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தைச் சேர்ந்த சாந்தினி சிவநேசனின் நிருத்தியாஞ்சலி இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - நட்டுவாங்கம் - சாந்தினி சிவநேசன், வயலின்- ஏ. ஜெய ராமன், மிருதங்கம் - எஸ். மகேந்திரன், பாட்டு - சுகன்யா, கீபோட் - என்.செல் வச்சந்திரன் ஆகி யோர் இசைக்கவுள்ளனர். (100)

## வருடாந்த மஹோற்சவம்

தெல்லிப்பளை

தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

## பத்திரிகையாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடத்துவது தொடர்பாக, இன்று மாலை 5 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள சர்வதேச தமிழ் மாணவர் பேரவை அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

எனவே, இந்தச் சந்திப்பில் அனைத்து பத்திரிகையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மாணவர் பேரவை பொறுப்பாளர் கண்ணன் தெரிவித்துள்ளார்.


நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சத்தியராஜ், வடிவேல், நமீதா நடித்த நகைச்சுவை நிறைந்த திரைப்படம்



இங்கிலீஷ்காரன்

ராஜா யாழ்ப்பாணம்

சுரேஸ்கோபி, மஞ்சு,விஜய்மேனன், விமல்ராஜ் மற்றும் பலர் நடித்த

பத்ரம்

விரைவில்... சூர்யா, கஜனி கஜினி

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

காதல் புகழ் பரத், ரேணுகாமேனன் நடித்த



பெப்ரவரி 14

காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)


## காணவில்லை

நாரந்தனை, ஊர்காவற்துறையைச் சொந்த முகவரியாகவும், இல. 89/164, ஜம்பட்டாவீதி, கொழும்பு - 3 ஐத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட செல்வன் கின்சன் கிஷன் என்பரைக் கடந்த 25.08.2005 இலிருந்து காணவில்லை. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**தமிழீழ காவல்துறை,**
**நடுவப் பணியகம்,**
**கிளிநொச்சி.**

*யோ.அன்ரனி குயின்ரஸ்,*
*நாரந்தனை மத்தி,*
*ஊர்காவற்துறை.*

தகவல்;
கபிரியேல் ஜஸ்மின்
பெரிய தாய். (C/4404)


நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலிநயத்துடன்

விக்ரம், சதா,விவேக் மற்றும் பலர் நடித்த




அந்நியன்

காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி,ரேணுகாமேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த



தாஸ்

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)

அடுத்த வெளியீடு:- 09.09.2005 முதல்

சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த தொட்டி ஜெயா

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30


# பணிநிலை வெற்றிடத்திற்கான நேர்முகத்தேர்வு

155 ஆம் கட்டை பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவன தலைமைப் பணிமனையில் AUP திட்டத்துக்கு (21) மாதங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் பணிநிலைக்கு ஆளணி நியமிப்பது தொடர்பான நேர்முகத்தேர்வு 07.09.2005, 08.09.2005 ஆம் திகதிகளில் புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய இரு நாட்களும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் நடைபெறவுள்ளதனால் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடையோர் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**01) தொழில்நுட்ப உத்தியோகத்தர் :-**

i. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ்.
ii. கல்வித் தகைமைச் சான்றிதழ்.
iii. ஆகக்குறைந்தது 5 வருடங்கள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iv. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.
v. ஏனைய தகுதிகள் இருப்பின் விரும்பத்தக்கது.

**02) சிரேஷ்ட வெளிக்கள அலுவலர் - 03**

i. கல்விச் சான்றிதழ்.
ii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
iii. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
iv. அனுபவச் சான்றிதழ்.
v. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**03) நிதி முகாமையாளர் - 02**

i. கல்விச் சான்றிதழ்.
ii. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமாணிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
iii. ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்.
iv. அனுபவச்சான்றிதழ்.
v. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**04) வெளிக்கள அலுவலர் - 08**

கல்வித்தகைமைகள் :- i. க.பொ.த. உ/த கற்றிருத்தல் வேண்டும்.
ii. முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**05) உளவள/ பாலின உதவியாளர் - 03**

i. இத்துறையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றிய முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
ii. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 20 வயது தொடக்கம் 40 வயது வரை.

**06) நிர்வாக உதவியாளர் - 02**

i. க.பொ.த. சா/த சித்தியடைந்திருத்தல்.
ii. நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**07) களஞ்சியப் பொறுப்பாளர் - 02**

i. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 45 வயதுவரை.

**08) கணக்குப் பதிவாளர் - 02**

i. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. கணக்கியலில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
iii. ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iv. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 20 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**09) சமூக அலுவலர்கள் - 08**

i. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ii. ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாயினும் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
iii. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 25 வயது தொடக்கம் 40 வயதுவரை.

**10) காவலாளிகள் - 03**

i. 08 ஆம் தரம் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 40 வயது வரை.

**11) பராமரிப்பாளர்கள் - 03**

i. ஆகக்குறைந்தது 05 ஆம் தரம் பயின்றிருத்தல் வேண்டும்.
ii. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

வயதெல்லை :- 30 வயது தொடக்கம் 50 வயதுவரை.

குறிப்பு :- 01. இருபாலாரும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கலாம்.
02. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
03. இத்திட்டம் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைறைப்படுத்தப் படவுள்ளதால்அந்தந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

[C/4558]

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 18 - 05 - 1980



இறைவன் அடியில்: 22 - 07 - 2005

## சிவராசா சிவகாந்தன்
(மட்டுவில்)

நற்குணங்கள் நிறைந்தவனே காந்தா
நண்பர்களாய் கூடி இருந்தோம்
நல்ல காரியங்கள் செய்து வந்தோம்
நாட்டு நடப்பில் பிரிந்திருந்தோம்
நம் ஊரை வந்தடைந்த காலமதில்
நல்ல நல்ல காரியங்கள் செய்யும் வேளையில்
நம்மை விட்டு ஏன் நண்பா
நழுவிச் சென்றாய் நீண்டதூரம்...!

04-09-2005 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**மட்டுவில் வாழ்**
**நண்பர்கள்.**

(2038)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட விவாசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர்

**திரு.ப.கனகலிங்கம்**

அவர்களின் அருமைத் தந்தையார்

**அமரர் நாகமுத்து பராஜசிங்கம்**

*(முன்னாள் பிரபல வர்த்தகர், திருமலை)*

அவர்களது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**உப தலைவர்,**
**இயக்குநர்கள்,**
**பொதுச்சபை பிரதிநிதிகள்,**
**பணியாளர்கள்.**

*யாழ். மா.வி.நு.கூ.ச. சமாசம்,*
*111, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/4564)

# எந்த அடிப்படையில் மஹிந்த புலிகளுடன் பேச்சு நடத்துவார்?

## வெளியிடக் கோருகிறது ஐ.தே.க

கொழும்பு—

சுனாமி பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்காத பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - அமைதிப் பேச்சுக்களை எவ்வாறு மீண்டும் தொடருவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐ.தே.க.துணைச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில் -

நாட்டின் பொருளாதாரம், யுத்தநிறுத்த ஒப்பந்தம், சுனாமி பொதுக்கட்டமைப்பு, தனியார்மயமாக்கல் உள்ளிட்ட விடயங்களில் சுதந்திரக்கட்சி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ எவ்வித நிலைப்பாட்டை மேற்கொள்ளப்போகின்றார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தத் தயார் என்று மஹிந்த கூறிவருகிறார். எந்த அடிப்படையில் இந்தப் பேச்சுக்களை நடத்துவார் என்பதை அவர் வெளிப்படுத்தவேண்டும்.

இத்தகைய அறிவிப்புக்கள் மூலம் சர்வதேச சமூகத்திடம் தவறான புரிதலை ஏற்படுத்த மஹிந்த ராஜபக்ஷ முனைகிறார்.

ஜே.வி.பியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் அமைதிப் பேச்சுக்களை எதிர்த்தவர்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதற்காக கண்ணீர் வடித்தவர்கள்.

சந்திரிகா குமாரதுங்கவை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவதற்காக 1994ஆம் ஆண்டு பாதயாத்திரை நடத்திய மஹிந்த ராஜபக்ஷதான் - நாட்டின் இன்றைய சூழலுக்கு பெறுப்பேற்க வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

# இலங்கை இராணுவச் சிப்பாய்களுக்கு இந்தியாவில் ரயில் சாரதி பயிற்சி!

கொழும்பு—

ரயில்சேவை ஊழியர்களின் திடீர் வேலைநிறுத்தத்தை எதிர்கொள்ளும் வகையில், இராணுவச் சிப்பாய்கள் நூறு பேருக்கு இந்தியாவில் ரயில் சாரதி பயிற்சிகளை வழங்க ரயில்வே அமைச்சர் பீலிக்ஸ் பெரோரா தீர்மானித்துள்ளார்.

இந்தப் பயிற்சியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் உடன்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரயில் சாரதி தரத்தை புதிய சேவையாகவும், சம்பள முறையை ஸ்தாபிக்குமாறும்கோரி ரயில் சாரதிகள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் - ரயில்வே அமைச்சருக்கும், சாரதிகளுக்குமிடையே உடன்பாடெதுவும் காணப்படாமையால் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

ரயில் சாரதிகள் வேலை நிறுத்ததில் ஈடுபட்டபோதிலும், 125 ரயில்கள் சேவையில் ஈடுபட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்தது. (தே)

# போதைப்பொருள் கடத்தலுடன் புலிகளுக்கு எந்த தொடர்புமில்லை!

## இந்திய போதைப்பொருள் தடுப்பு இயக்கம் தகவல்

கொழும்பு—

தமிழகத்திலிருந்து போதைப் பொருள்கள் கடத்தப்படுவதற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று இந்திய அரசின் போதைப் பொருள் தடுப்புத்துறையின் பிராந்திய இயக்குனர் சங்கர் ஜிவால் தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னையிலிருந்து வெளியாகும் 'டெக்கான் குரோனிக்கல்' ஆங்கில நாளேட்டுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகள் போதைப் பொருள்களை கடத்தியதற்கான எதுவித சான்றும் இதுவரை இல்லை. புலிகள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக பலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதை நிரூபிக்கும் ஆவணங்கள் எதையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. இது தொடர்பான புலனாய்வுத்துறை தரப்பு தகவல்கள் கூட இல்லை.

கடந்த ஜனவரி முதல் ஒகஸ்ட் மாதம் வரை போதைப்பொருள் கடத்தியதாக தமிழ்நாட்டில் 54 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 19 பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஏனைய அனைவரும் இந்தியர்கள்.

இந்த ஆண்டு காலத்தில் 72 கிலோ கிராம் போதைப்பொருள் கடத்தப்பட்டுள்ளன.

இதில் 275 கிராம் மட்டும் தான் மாலைதீவுக்குக் கடத்தப்பட இருந்தது. எஞ்சியவை இலங்கைக்குக்கொண்டு செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. போதைப் பொருள் கடத்தலில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் கொண்ட இடமாக விளங்குகிறது.

இதுவரை தரைமார்க்கமாகக் கடத்தப்படும் போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அண்மையில் படகுமூலம் இலங்கைக்கு கடத்தப்படவிருந்த போதைப்பொருளை இந்திய கடற்படை உதவியுடன் முதன் முறையாக இந்திய போதைப் பொருள் தடுப்புப்பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# றம்ழான் நோன்புக் காலத்தில் தேர்தல் நடத்தப்படமாட்டாது!

## தேர்தல் ஆணையாளர் உறுதி

கொழும்பு—

றம்ழான் நோன்புக்காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படமாட்டது என, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

றம்ழான் மாதத்தில் தேர்தலை நடத்தவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கு அமைய தேர்தல் ஆணையாளர் மேற்படி உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

ஒக்ரோபர் 3 ஆம் திகதிக்கும், நவம்பர் 5 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் றமழான் நோன்பு அனுஷ்டிக்கப் படுவதால் - தேர்தல் திகதியை றம்ழான் நோன்பைத் தவிர்க்கும் வகையில் தீர்மானிக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் உறுதியளித்ததாக அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிரமதானம் செய்தாலேயே 5000 ரூபா கொடுப்பனவு!

## புதிய திட்டம் வருகிறது

கொழும்பு—

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உலகவங்கியின் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட 5000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவுக்குப் பதிலாக - சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விசேட நிகழ்ச்சித்திட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, 5000 ரூபா கொடுப்பனவின் நான்காவது கட்டம் இந்த மாதத்துடன் முடிவடைந்த பின்னர் சமுர்த்தி அதிகாரசபை ஊடாக புதிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திறைசேரியாலேயே கொடுப்பனவு வழங்கப்படும். அந்தக் கொடுப்பனவு 5000 ரூபாவாக இருப்பதுடன் - இதைப் பெற வேண்டுமெனில் சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் ஏதாவது அபிவிருத்தி தொடர்பாக மாதமொன்றுக்கு 12 நாட்கள் சிரமதானப் பணிசெய்யவேண்டுமெனவும் தெரியவருகிறது. (தே)

# ஆயுதங்களைக் களையாததால்தான் கொலைச் சம்பவங்கள் தொடர்கிறது!

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு—

ஆயுதங்களைக் களையாமல் பேச்சுக்கள் தொடங்கப்பட்டதால்தான் படுகொலைகள் தொடர்ந்துகொண்டிருப்பதாக, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.


கட்டுக்குருந்தை விசேட அதிரடிப்படை பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது உயிரிழந்த 21 விசேட அதிரடிப்படையினரின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வேறு நாடுகளில் ஆயுத அமைப்புகளுடன்பேச்சுவார்த்தைகளை நடத்த உடன்படிக்கைகளைக்கைச்சாத்திடும்போது அந்த நாடுகள் ஆயுதங்களைக் கீழே போடுமாறு குறித்த அமைப்புகளிடம் கூறுகின்றன. எனினும் எமது நாட்டில் அவ்வாறு செய்யாததால் படுகொலைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

ஜனநாயக அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் எதிராக படுகொலைகளை மேற்கொள்ளும் இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்துவது இன்று சற்று சிரமமான காரியமாகியுள்ளது.

பயங்கரவாதத்தை ஒடுக்க விசேட அதிரடிப்படை பெரும் பணியாற்றியுள்ளது. நாட்டின் பாதுகாப்புக்காகவும், எதிர்காலத்துக்காகவும் உயிர்நீத்த படைவீரர்கள் என்றுமே மக்களின் நினைவில் வாழ்வார்கள் என்றும் ரத்னசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார்.



# மஹிந்தவுடன் அடுத்த வாரம் முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளார் மஹிந்த ராஜபக்ஷவுடன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடுத்த வாரம் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.கவுடன் சேர்ந்து போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்த முடிவெடுத்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு தொடர்பாக ஆராயப்படும் என்றும், முஸ்லிம்களின் அபிலாஷைகளை ஆதரிக்கும் எந்தத் தலைவருக்கும் தாம் ஆதரவளிக்கத் தயாராகவிருப்பதாகவும் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பான எந்த நிலைப்பாட்டையும் முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருக்கவில்லை என்று கூறிய அவர்-

நாங்கள் இரண்டு பிரதான வேட்பாளருடனும் கொள்கை தொடர்பாகப் பேச்சுக்களை நடத்த விரும்புகிறோம். சாதகமான வகையில் முடிவு கிடைக்கும் என்று நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 54 ஆவது வருடாந்த மாநாடு!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 54 ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காக வைத்து, இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த மாநாட்டில் பெருமளவானோரை பங்குபெறச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

நாடு முழுவதுமுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவர்களை கொழும்பு கம்பல் பூங்காவுக்கு வரவழைத்து, அங்கிருந்து பாதயாத்திரையாக கிறின்ஸ் வீதிவழியாக குதிரைப் பந்தயத்திடலுக்கு அழைத்துச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் 15 லட்சம் பேரை இந்த மாநாட்டில் பங்கேற்கச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர்களை கொழும்புக்கு அழைத்துவருவதற்குப் போக்குவரத் துச் சபைக்குச் சொந்தமான 2000 பஸ்களையும், 4000 தனியார் பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறச் செய்வதே இந்த மாநாட்டின் முக்கிய இலக்கு என அந்தக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு கம்பல் பூங்காவிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் கலாசார நிகழ்வுகளை சித்தரிக்கும் வகையிலான ஊர்திகளை ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலம் முடிவடைந்ததும் மாலை 4 மணிக்கு கூட்டம் இடம்பெறும்.

இந்த மாநாட்டை சிறப்பாக நடத்தி முடிக்க குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (தே)

# அமெரிக்காவில் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை 25 ஆயிரம் டொலர் உதவி

வொஷிங்ரன்—

அமெரிக்காவில் கத்ரீனா சுறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம் நேற்றுமுன்தினம் 25 ஆயிரம் அமெரிக்க டொலர் உதவிகளை வழங்க உறுதியளித்துள்ளது. அத்துடன் அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களான வைத்தியர்களிடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக சேவை யாற்றுமாறும் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் மோசமான இயற்கையழிவு ஏற்பட்டிருக்கும் நேரத்தில் இலங்கை வழங்கும் உதவிக்கும், அதன் அக்கறைக்கும் நன்றி தெரிவிப்பதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான இயற்கை அனர்த்த விவகாரப் பொறுப்பாளர் ஜேம்ஸ் எப். என்ட் விஸ்டில் கூறியுள்ளார்.



## வீடியோகோன் முத்தரப்பு தொடர்

# 6 விக்கெட்டுக்களால் இந்திய அணி நியூஸிலாந்தை தோற்கடித்தது!

ஹராரே —

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்தியா, நியூஸிலாந்து, சிம்பாப்வே ஆகிய 3 நாடுகளிடையேயான வீடியோகோன் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது.

இதன் 5ஆவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் ஹராரேயில் நடந்தது. இதில் இந்திய - நியூஸிலாந்து அணிகள் மோதின.

இந்திய அணியில் காய்ச்சல் காரணமாக கடந்த போட்டியில் ஆடாத ஷேவாக் களமிறங்கினார். வேணுகோபால் ராவ் நீக்கப்பட்டார். பதில் வீரராக சுரேஷ் ரெய்னாவுக்கு பதிலாக முரளி கார்த்திக் சேர்க்கப்பட்டார்.

நியூஸிலாந்து அணியில் முதல் ஆட்டத்தில் இந்திய அணியின் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்திய ஷேன் பொண்ட், டானியல் விற்றோரி ஆகியோருக்குப் பதிலாக ஆந்ரே அடம்ஸ், கிறிஸ் கெய்ன்ஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டனர். பதில் வீரராக ஜீதன் பட்டேல் இருந்தார்.


நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக பிளெமிங், அஸ்ரில் களமிறங்கினர்.

ஸ்கோர் 11 ஓவர்களில் 54 ஆக இருந்தபோது, அஸ்ரில் 11 ஓட்டங்களுடன் அகர்கரின் பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வின்செண்ட் களமிறங்கினார். ஸ்கோர் 83ஐ எட்டியபோது பிளெமிங் 47 ஓட்டங்களுடன் அகர்கரால் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். அவர் 53 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்த சில ஓவர்களிலேயே வின்சென்ட், யுவராஜ் சிங்கால் ரன் அவுட் செய்யப்பட்டார். அவர் 23 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் ஸ்ரைரிஸ், மார்ஷலுடன் இணைந்தார். மார்ஷல் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து மக்மிலன் களமிறங்கினார். ஸ்ரைரிஸ் - மக்மிலன் இணை ஆரம்பச் சரிவைச் சமாளிக்கும் விதத்தில் நிதானமாகவும், அதே நேரத்தில் அடித்தும் ஆடியது. இதனால் ஓட்ட விகிதம் உயர்ந்தபடி இருந்தது.

ஸ்கோர் 41.2 ஓவர்களில் 202 ஆக இருந்தபோது மக்மிலன் 40 ஓட்டங்களுடன் அகர்கரின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய மக்கலம் அதிரடியாக அடித்து ஆடினார். 21 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 28 ஓட்டங்களைச் சேர்த்த அவர், நெஹ்ராவின் பந்தில் கைவ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஓரம் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நிலைத்து நின்று ஆடிய ஸ்ரைரிஸ் 56 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடம்ஸ் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.




நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு நியூஸிலாந்து 278 ஓட்டங்களைக் குவித்தது. கெய்ன்ஸ் 6 ஓட்டங்களுடனும், மில்ஸ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய அணி தரப்பில் நெஹ்ரா, பதான், அகர்கர் ஆகியோர் தலா 2, யாதவ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 279 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஷேவாக், கங்கூலி களமிறங்கினார்கள். ஷேவாக் தனது வழக்கமான அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார்.



ஸ்கோர் 6.6 ஓவர்களில் 66 ஓட்டங்களை எட்டியபோது கங்கூலி 19 ஓட்டங்களுடன் மில்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 21 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.



அடுத்து கைவ், ஷேவாக்குடன் இணைந்தார். அதிரடியாக ஆடிய ஷேவாக் 34 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஓரமின் பந்து வீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து துணைக் கப்டன் ராவிட், கைவ்வுடன் ஜோடி சேர்ந்தார். அணிக்கு அடித்தளமாக கிடைத்த நல்ல தொடக்கத்தை இருவரும் வலுப்படுத்தும் வகையில் நிலைத்து நின்று ஆடினார்கள்.

ஸ்கோர் 30.4 ஓவர்களில் 176 ஓட்டங்களை எட்டியபோது ராவிட் 39 ஓட்டங்களுடன் ஸ்ரைரிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த யுவராஜ் 23 பந்துகளில் 1 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 22 ஓட்டங்களை எடுத்து எல்.பி.டபிள்யூ ஆனார்.

பின்னர் டோனி, கைவ்வுடன் இணைந்தார். இந்த இணை அணியை வெற்றியை நோக்கி கொண்டு சென்றது.

சிறப்பாக ஆடிய மொகமட் கைவ் சதமடித்தார். அவர் அடித்த 2ஆவது சதம் இதுவாகும்.

47.3 ஓவர்களில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 279 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கைவ் 121 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 102 ஓட்டங்களுடனும், டோனி 27 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக கைவ் தெரிவானார்.

பந்துவீச்சில் ஓரம், மில்ஸ், ஸ்ரைரிஸ், பட்டேல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்திய - சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

## ஜனசக்தி கிண்ண உதைபந்தாட்டம்

# யங்கம்பன்ஸ், சிவானந்தா அணிகள் இரண்டாம் சுற்று ஆட்டங்களுக்கு தகுதி

வடமராட்சி —



ரஜீகரன்

ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்காக நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற போட்டியின் முதல் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கி முதல்

விளையாட்டு

2ஆவது நிமிடத்திலேயே அல்வாய் நண்பர்கள் அணியைச் சேர்ந்த கே.நெல்சன் முதல்கோலைப் போட்டார். அதன்பின்னர் இரு அணிகளும் மிக விறுவிறுப்பாக மோதின.

யங்கம்பன்ஸ் அணியினர் பெரிதும் முயற்சித்தபோதும், இடைவேளைக்கு முன்னர் எந்தக் கோலையும் போடமுடியவில்லை. இதனால் இடைவேளைக்கு முன்னர் அல்வாய் நண்பர்கள் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.


இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது முதல் 5ஆவது நிமிடத்திலேயே தமது வெற்றியை உறுதிசெய்யும் நோக்குடன் யங்கம்பன்ஸ் அணி வீரர் ரத்தினவேல் மிக நேர்த்தியான கோலொன்றைப் போட்டார். அதன்பின்னர் ஆட்டம் இன்னும் விறுவிறுப்படைந்தது. 18ஆவது நிமிடத்தில் அல்வாய் நண்பர்கள் அணி வீரர் கோல் பிரதேசத்துக்குள் வைத்து பந்தைக் கையால் தடுத்தமையால் யங்கம்பன்ஸ் அணிக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது.

இதனை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி அவ்வணியைச் சேர்ந்த குகேந்திரன் கோலை அடித்தார். அதன்பின்னர் 20ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியைச் சேர்ந்த ராஜகாந்தன் தனியே பந்தைக் கொண்டு சென்றபோதும், அதனை கோலாக்கத் தவறிவிட்டார்.

இருந்தபோதும், 23ஆவது நிமிடத்தில் அதே வீரரால் ஒரு கோல் போடப்பட்டது.

அதன்பின்னர் அல்வாய் நண்பர்கள் அணியினர் எவ்வளவுதான் முயற்சித்தபோதும் கோல் எதனையும் போடமுடியவில்லை. இதனால் யங்கம்பன்ஸ் அணி அல்வாய் நண்பர்கள் அணியை 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

மற்றைய போட்டியில் சிவானந்தா அணியை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை அணி மோதியது. ஆட்டம் தொடங்கி 7ஆவது நிமிடத்திலேயே சிவானந்தா அணி வீரர் ரஜீகரன் முதலாவது கோலைப் போட்டார்.



ரத்தினவேல்

15ஆவது நிமிடத்தில் வல்வெட்டி ஒற்றுமை அணி வீரர் முகுந்தராஜ் அடித்த பந்தை சிவானந்தா கோல் காப்பாளர் பிடிக்க முற்பட்டபோது, அப்பந்து நிலத்தில் பட்டு - கோல் காப்பாளரின் மேலால் சென்று கோலானது. இதனால் கோல்களின் எண்ணிக்கை சமன் செய்யப்பட்டது.

இதனை முறியடிக்க 17ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணியினர் தமக்குக் கிடைத்த கோணர் வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்தி மேலும் ஒருகோலைப் போட்டனர். இதில் கோணர் உதையை பிரகாஷ் அடிக்க அதனை மிக அழகாக அதே அணியைச் சேர்ந்த கிருபாகரன் தலையால் இடித்து கோலாக்கினார்.


இதனால் இடைவேளைக்கு முன்னர் சிவானந்தா அணியினர் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோதும் எந்த அணியாலும் கோல் அடிக்க முடியாமல் போனது.

இதனால் சிவானந்தா அணி வல்வெட்டி ஒற்றுமை அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றது.

(12)

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்



# சானியா, கிளைஸ்டர்ஸ், வீனஸ் சகோதரிகள் நான்காவது சுற்றுப் போட்டிக்கு முன்னேற்றம்!




நியூயோர்க் —

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. இதன் ஆண்களுக்கான 2ஆவது சுற்று ஆட்டமொன்றில் உலகின் 3ஆம் நிலை வீரரான லெய்டன் ஹெவிட் (அவுஸ்ரேலியா), ஆஜென்ரீன வீரர் ஜோஸ் அக்கவுசாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஹெவிட் 7(8)-6(6), 7(7)-6(3), 6-7 என்ற நேர்செட்டில் வெற்றிபெற்று 3ஆவது சுற்றில் நுழைந்தார். மற்றொரு ஆட்டத்தில் ஸ்ரீசேப்பன் (தாய்லாந்து) நிக்கோல் (ரஷ்யா) மோதினார்கள். இதில் சேப்பன் 6-4, 7-6, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார்.

மற்றய ஆட்டங்களில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயா 6-3, 1-6, 2-6, 4-6 என்ற செட் கணக்கில் சன் குயிரெட்யிடமும் (இத்தாலி), பீற்றர் வெசல்ஸ் (நெதர்லாந்து), டேவிட் நல்பாண்டியனிடம் (ஆஜென்ரீனா) 6-7, 6-1, 2-6, 6-7 என்ற கணக்கிலும் தோல்வியடைந்தனர்.

பெண்கள் பிரிவில் நேற்றுமுன்தினம் 3ஆவது சுற்று ஆட்டங்கள் நடந்தன. இதில் ஒரு ஆட்டத்தில் உலகின் 10ஆம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) சுலோவாக்கிய வீராங்கனை டேனிலா ஹெரட்ச்னோவாவுடன் மோதினார்.



இந்த ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸ் 6-3, 6-3 என்ற நேர் செட்டில் எளிதாக வெற்றிபெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்) - சுகியாமா (ஜப்பான்) மோதினர்.

இதில் கிளைஸ்டர்ஸ் 6-1, 6-4 என்ற நேர் செட்டில் சுகியாமாவைத் தோற்கடித்து அடுத்த சுற்றில் நுழைந்தார். இன்னொரு ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ், இத்தாலி வீராங்கனை பிரான்சஸ்காவை எதிர்கொண்டார். இதில் செரீனா 6-3, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார்.

இதேவேளை இந்திய வீராங்கனை சானியா பிரான்சின் மரியான் பர்டோலியை தோற்கடித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். முதல் செட்டில் கடும் போராட்டம் நீடிக்க, டை-பிரேக்கர் வரை சென்றது. டை - பிரேக்கரில் அபாரமாகச் செயற்பட்ட சானியா வெற்றியை 7:4 என தனதாக்கினார். அடுத்த செட்டில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய சானியா 7-6(7-4), 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற் றார். இந்த வெற்றியைப் பெற இவர் சுமார் 1 மணி நேரம் 35 நிமிடங்கள் போராடவேண்டியிருந்தது.

அமெரிக்க ஓபன் ரெனிஸில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. இதில் ஒரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சானியா, உலகின் முதல்நிலை வீராங்கனையான மரியா ஷரபோவாவை (ரஷ்யா) எதிர்கொள்கிறார்.

மற்றய ஆட்டங்களில் வில்லியம்ஸ் சகோதரிகள் செரீனா-வீனஸும், கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்)-மரியா வென்டோ(வெனிசுலா) மோதுகின்றனர்.

# உதைபந்தாட்டப் போட்டியில் இன்று

வடமராட்சி —

ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் அனுசரணையுடனும், நமது ஈழநாடு பத்திரிகையின் ஊடக அனுசரணையுடனும் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் டயமன்ஸ் மைதானத்தில் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் -

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா மோதும் போட்டி மாலை 4 மணிக்கும்,

சென்.சேவியர் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதும் போட்டி மாலை 5 மணிக்கும் இடம் பெறவுள்ளன.

# முன்னேற வேண்டும் என்னும் அவா மாணவப் பருவத்திலேயே எழுகிறது!

## அமெரிக்க மருத்துவ நிபுணத்துவ சபை உறுப்பினர் ஜெயராசா



யாழ்ப்பாணம் —

நவீன விஞ்ஞான முன்னேற்றங்களைக் கண்டுள்ள இன்றைய உலகில், பல்வேறு புதிய பாடத் திட்டங்களுக்கு முகம்கொடுத்து, முன்னேற வேண்டிய கடப்பாடு மாணவர்களுக்கு இருக்கிறது என, அமெரிக்க மருத்துவ நிபுணத்துவ சபை உறுப்பினர் ஸ்ரீ ஜெயராசா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் க்ல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில் -

யாழ். இந்துக்கல்லூரி பல சைவப் பெரியார்களின் தாராள மனப்பான்மையாலும், பெருமுயற்சியாலும் உருவாக்கப்பட்ட கல்விக் கூடமாக இருந்து வருகிறது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கின்ற பருவமாக மாணவப் பருவம் அமைகிறது. இந்தக் காலம் பொன்னானதென்பதையும், அது ஒரு குறுகிய கால எல்லைக்குட்பட்டது என்பதையும் மறந்து விடாதீர்கள். இந்தக் காலம் போனால், மீண்டும் வராது. இதை நல்ல முறையில் பயன்படுத்தி, வாழ்க்கையில் முன்னேற வேண்டியது மாணவர்களது கடமையாகும்.

இன்றைய காலத்தில் அமெரிக்காவில் எத்தனையோ மாணவர்கள் கல்வி கற்பதை நிறுத்தி விட்டுப் போதைப் பொருள் பாவனை மது, பாலியல் நடத்தைகள் என்று குறுக்கு வழியில் சென்று, தமது வாழ்வையே சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்வே கேள்விக் குறியாகி விடுகின்றது. இவ்வாறானதொரு கலாசார சீரழிவு யாழ்ப்பாணத்தில் இடம்பெறாது தடுக்க வேண்டுமானால், அது மாணவர்களாகிய உங்களால் மட்டுமே முடியும். அது மாணவப் பருவத்தினராலேயே மேற்கொள்ள வேண்டியதும் ஒன்றாகும்.

ஒருவர் கல்வி கற்பதிலும் சரி, வாழ்க்கையிலும் சரி முழுமையாக வெற்றி பெற வேண்டுமானால் விடாமுயற்சியும், நேர்மையும் இருக்க வேண்டும்.

இன்று உலகம் இலத்திரனியல், மருத்துவம், பொறியியல், கணக்கியல், கணினித்துறை, மென்பொருளியல், தகவல் தொழில் நுட்பம் எனப் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்து செல்கிறது. இந்த துறைகளில் மாணவர் கல்வி கற்று, எதிர்காலத்தில் சகலதுறை நிபுணத்துவம் கொண்டவர்களாக மாற்றம் காண வேண்டும்.

எதிர் காலத்தைத் தீர்மானிக்கின்ற பருவமாக மாணவப்பருவம் இருக்கின்ற போதிலும், அந்த மாணவப் பருவத்திற்குள்ளேயே பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக மாணவர்கள் இருக்கின்றார்கள்.

இத்தகைய மாணவப் பருவத்திலிருந்து வளர்ந்து, இன்றுபல்வேறு துறைகளில் நிபுணத்துவ வல்லுநர்களாக இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இருக்கிறார்கள். அதே போன்று இன்று மாணவர்களாக இருக்கிறவர்கள், எதிர்காலத்தில் முழுமை பெற்ற ஓர் சமுதாயமாக வளர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# இராணுவ சிப்பாய் மரணம் சகபாடி ஒருவர் கைது!

மருதங்குளம் —

மருதங்குளம் வீதி எழுதுமட்டுவாழில் அமைந்துள்ள இராணுவக் காவலரனில் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மற்றொரு இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் றொசான் குணரட்ண (வயது 24) என்ற இராணுவச் சிப்பாயே கொல்லப்பட்டவராவார்.

இவரைச் சுட்டுக்கொன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் ஹரிந்த ஜெயலத் என்ற இராணுவச் சிப்பாயே கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்புத் தகவகள் தெரிவித்தன.

# ஓய்வு பெற்ற கிராம அலுவலர்கள் நான்குபேருக்கு மீள் நியமனம்

மட்டுவில் —

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி, ஓய்வு பெற்ற 4 கிராம அலுவலர்கட்கு மீள்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் இந்த நியமனம் வழங்கப்பட்ட போதும், கடந்த வாரமே இந்தக் கடிதங்கள் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.

குறிப்பிட்ட பிரதேச செயலகத்தில் 60 கிராம அலுவலர் பிரிவுகள் இருக்கின்றபோதும், 42 கிராம அலுவலர்களே கடமையாற்றுகின்றனர்.

இந்த நிலையில் வெற்றிடமாகவுள்ள 18 இடங்களில் பொருத்தமான இடங்களில் எஸ்.தில்லையம்பலம், க.இராஜதுரை, க.சுந்தரராஜா, பி.செல்லையா ஆகியோருக்கு மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளன. (25)




சாவகச்சேரி வைத்தியசாலையின் தேவை கருதி, யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜா ஒரு தொகுதி உடுபுடவைகள் , சிறுவர்களுக்கான பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை வைத்திய அதிகாரி அம்பிகைபாலனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஸ்தாபகர் நினைவு தினமும் நூலகத்திறப்பு விழாவும்

மட்டுவில் —

மட்டுவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலய ஸ்தாபகரான அமரர் பொன்.தாமோதரம்பிள்ளையின் 28ஆவது நினைவு தினமும், நூலகத் திறப்பு விழாவும் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் அவரது ஞாபகார்த்தமாக "சைவநெறி நூல் நிலையம்" ஒன்றும் இந்த ஆலயத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் வைத்திய கலாநிதி நா.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் - விசேட அபிஷேகம், மங்கள இசை என்பவற்றைத் தொடர்ந்து, முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களது தேவார பாராயணமும் இடம்பெறும்.

தொடர்ந்து ஸ்தாபகரது வாழ்க்கை வரலாறு என்னும் தலைப்பில் யாழ். சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த பொன். மங்களேஸ்வரனும் ''மாணிக்க வாசகர் வரலாறு'' என்னும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் நா.நல்லதம்பியும், ''திருவாசகம் என்னுந்தேன்'' என்னுந் தலைப்பில் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசனும் சொற்பொழிவு நிகழ்த்துவர். விசேட சொற்பொழிவுகளைத் தொடர்ந்து அமரர் பொன்.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட ''சைவ நெறிநூலகம்'' திறந்து வைக் கப்படும்.(24)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மந்திகையில் விசேட மருத்துவ சேவை

மந்திகை —

மந்திகை ஆதார வைத்தியசாலையில் எதிவரும் 10 ஆம் திகதியும், 24 ஆம் திகதியும் விசேட மருத்துவ சேவை நடைபெறவுள்ளது.

இதில் கண்,காது, மூக்கு தொடர்பான வைத்திய சேவை மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.(12)

## வியாபார உரிமக் கட்டணத்தை செலுத்துமாறு அறிவுறுத்தல்

உரும்பிராய் —

இந்த ஆண்டுக்கான வியாபார நிறுவனங்களின் உரிமக் கட்டணங்களைச் செலுத்துமாறு, வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உபஅலுவலகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்துக் குட்பட்ட வியாபார நிறுவனங்கள் - இந்த ஆண்டுக்கான (2005) வியாபார உரிமக் கட்டணங்களை கட்டத் தவறியவர்கள் உடனடியாக அதனைச் செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் இதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதனையும் உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (12)

## மகாகும்பாபிஷேகம்

மீசாலை —

மீசாலை வடக்கு கொடிகாமம் கோயிலாமனை அருள்மிகு மருதடி முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் - எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.34 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க கிரியைகள் 5 ஆம் திகதிமுதல் இடம்பெறும். 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் யாவும் சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (24)

## மாவட்ட பதிவாளர்களாக பதவி உயர்வு

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிய க.நடராசா, ப.பிரபாகர், எஸ். ஆனந்தி ஆகியோர் மேலதிக மாவட்டப் பதிவாளர்களாகப் பதவியுயர்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் கடந்த 1ஆம் திகதி முதல் கொழும்பில் இடம்பெற்று வருகின்றன. பயிற்சி நிறைவில் இவர்களுக் கான நியமனங்கள் வழங்கப் படும்.

கடந்த வருடம் இடம்பெற்ற போட்டிப் பரீட்சை, மற்றும் இந்த வருடம் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சை என்பவற்றின் அடிப்படையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (24)

## சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு

மந்திகை —

மந்திகை ஆதார வைத்தியசாலையில் கழிவுப் பொருட்களைச் சுத்திகரிப்பதற்காக 7.8 மில்லியன் ரூபா பெறுமதியுடைய சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்தக் கழிவுப்பொருட்கள் பௌசர்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, வேறு இடங்களில் கொட்டப்பட்டது. இதனால் பாரிய சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

ஆனால், தற்போது இந்த இயந்திரத்தின் வருகையால் நீரையும், கழிவுகளையும் வேறாக்கி தொற்று நீக்கி அனுப்பக் கூடியதாக உள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (12)

## மணவாளக் கோல உற்சவம்

நுணாவில் —


நுணாவில் மேற்கு - கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல உற்சவம், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நவோத்தர சங்காபிஷேகம், திருவூஞ்சல், திருவீதியுலா என்பன இடம்பெற்று, பகல் அடியார்கட்கு அன்னதானமும் வழங்கப்படும்.

மறுநாள் புதன் கிழமை விநாயக சதுர்த்தி உற்சவம் மாலை 3.30 மணிக்கு ஆரம்மாகி நடைபெறும். (24)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை இரண்டு



பெயர் : செ.பரத்கிருஷ்ணா
முகவரி : அரியாலை.

### அகவை இரண்டு



பெயர் : ரா.ஹம்ஷத்வனி
முகவரி : புளோப்பளை.

### அகவை ஏழு



பெயர் : செ.கெவின்
முகவரி : பிரான்ஸ்.

### அகவை ஏழு



பெயர் : தி.பவரதன்
முகவரி : மூளாய்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ----------------
முகவரி : ----------------
பிறந்த ஆண்டு : ----------------



---------------
பெற்றோர் ஒப்பம்




# மீண்டெழும் சாம்ராஜ்யம்


மைக்கல் வோண்
புதிய சிற்பி

இப்போதுள்ள கேள்வி 2005ஆம் ஆண்டு ஆஷஸ் தொடர் இங்கிலாந்தின் கையைவிட்டு நழுவிப் போக முடியுமா என்பதுதான். இந்த வேளையில் தான் கருங்கல் பாறை என இருந்த அவுஸ்ரேலிய அணி கண்ணாடிப் பூக்களாகிப் போன துயரமும் மனதில் துளிர்க்கிறது.

ஆஷஸ் தொடருக்கு அவுஸ்ரேலியா, இங்கிலாந்தில் வந்து இறங்கியபோது, கடும் போட்டி ஒன்றைக் கொடுக்கும் அளவிற்கு இங்கிலாந்து மோதும் என்றாலும், "சாம்பல் குடுவை" அவுஸ்ரேலியாவுக்குத் தான் என்பதில் பெரிதாக ஒரு சந்தேகம் எழும்பவில்லை. முதலாவது டெஸ்ட் போட்டியும் அநேகருடைய ஊகத்தைக் கெடுக்கவில்லை. முதலாவது டெஸ்ட் போட்டியில் 239 ஓட்டங்களால் வெற்றி பெறவே அவுஸ்ரேலிய அணியின் கட்டுக் கோப்பு அப்படியே இருக்கிறது என்று தான் நினைத்தார்கள். ஆனால் அதன் பின்னர் இங்கிலாந்து புதுக்கவிதை எழுதத் தொடங்க, அவுஸ்ரேலிய அலமலந்து போன துயரம் ஆரம்பமாயிற்று. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வென்றபோது ஆஷஸ் சுவைதட்ட ஆரம்பித்தது. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தாலும் அதற்காக அந்த அணி பட்டபாடு - இது எல்லோரது மனக் கண்ணிலும் பதிந்திருந்த அணிதானா என்ற சோகத்தை தான் உருவாக்கியது.

இருந்தாலும் அவுஸ்ரேலிய ரசிகர்கள் இதோ பார் பீனிக்ஸ் பறவையாக எழுவார்கள் என்று கொக்கரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நான்காவது டெஸ்ட் போட்டியை இங்கிலாந்து தனது வெற்றியாக்கி இன்னொரு டெஸ்ட் போட்டி மட்டும் எஞ்சியிருக்கையில் 2-1 என்று முன்னணி வகித்தபோது எல்லோருக்கும் நாடி விழுந்துவிட்டது.

இப்போதுள்ள கேள்வி இதுதான். ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றி பெற்று தொடரை 2-2 என்று சமன் செய்து பீனிக்ஸ் பறவைகளாகி ஆஷஸ் கிண்ணத்தைத் தம் வசம் தக்கவைத்துக் கொள்வார்களா என்பதுதான். ஏனெனில் இங்கிலாந்து பெரிதாகக் கஷ்டப்பட்டு அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்துத்தான் ஆஷஸ் கிண்ணத்தைப் பெற வேண்டும் என்பதல்ல. ஒரு வெற்றி தோல்வி இன்றி முடிவடையும் ஆட்டம் அவர்களுக்குக் காணும். இதே வேளை எதிர்பார்க்காமல் வெற்றித் தேவதை இங்கிலாந்தின் பக்கம் பார்த்தால் அவளை அணைத்துக் கொள்ள இங்கிலாந்து மறுக்கப்போவதில்லை.


றிக்கி பொண்டிங்
சிலை தான் நிலை

ஆனால் அவுஸ்ரேலியா பத்தொன்பது வருடங்களுக்குப் பின் இங்கிலாந்திடம் ஆஷஸ் தொடரைப் பறிகொடுக்கும் நிலைக்கு உள்ளாகிவிடும் சந்தர்ப்பமே அதிகம் தெரிகிறது. இதனைத் தடுக்க வெற்றியைத் தவிர வேறு எதுவும் உதவப் போவதில்லை.

அணிகள் என்று எடுத்துக்கொண்டால் இந்த நிமிடத்தில் அவுஸ்ரேலிய அணியை விட இங்கிலாந்து அணி பல படி முன்னே நிற்கின்றது. அவர்களது நீண்ட கால உழைப்புக்கு இப்போது பலன் கிடைக்கிறது. அவுஸ்ரேலியாவுக்கு என்ன நடந்தது? ஏலவே பல விமர்சகர்கள் சுட்டிக் காட்டிய படி முதுமை நிறைந்த அவுஸ்ரேலிய அணி தாக்குப் பிடிக்க முடியாமல் தவிக்கிறதா? அவுஸ்ரேலிய அணிப் பயிற்றுநர் ஜோன் புக்கானனின் பயிற்சி முறைகளுக்கு மாறாக டங்கன் பிளெட்சர் இங்கிலாந்து வீரர்களுக்கு புதுமை, இளமை நிரம்பிய "ரொணிக்" கொடுத்திருக்கிறாரா?

ஆஷஸ் டெஸ்ட் தொடர் என்பதே ஒரு போர் தான். ஆனால், இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு ஆஷஸ் தொடரின் ஐந்தாவது டெஸ்ட் போருக்குள் ஒரு உக்கிரப் போராக மாறப் போகிறது. ஏனெனில் அவுஸ்ரேலிய அணியின் வாழ்வா சாவாப் பிரச்சினை இது. அது மட்டுமல்ல அவுஸ்ரேலிய பல பிரபல்யங்களின் தலை மீது கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களின் கழுத்துத் தப்புமா? அல்லது புதிய இளமைகள் அவுஸ்ரேலிய அணியில் மினுங்குமா ? விரைவில் விடை தெரியும்.

- ஜோசப் கிருஷ்ணா

# எங்கள் வீட்டு மல்லிகை

சர்வதேச அரங்கிலே எமது வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவது என்பது மிகவும் அரிதான விடயம். அதிலும் வெற்றி பெறுவது என்பது அரிதிலும் அரிதாக இருந்து வருகின்றது.

சர்வதேச அரங்கிலே எமது பிரதேச வீரர்கள் பலர் போட்டியிட்டு வெற்றி பெற்று இருக்கின்றார்கள் என்பது குறைவாக இருந்தபோதிலும், அண்மையில் தென்கொரியாவில் நடைபெற்ற சர்வமதங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் அஞ்லோட்டப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றவீரர் அ.டியூரன். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த வீரர் ஆரம்பத்திலேயே விளையாட்டுத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த போதிலும், தனது திறமைக்கேற்ற விளையாட்டைத் தெரிவு செய்து விளையாட்டுகளில் வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பயிற்சியாளர் எஸ்.ரமணன் என தனது குருவினை எடுத்துக் கூறியுள்ளார்.


அ.டியூரன்

ஆரம்பக் கல்வியை சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்திலும், உயர்கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும் பயின்ற இவர், பாடசாலை மட்டப் போட்டிகளில் உதைபந்தாட்டம், தடுப்பாட்டம், 800மீற்றர், 400 மீற்றர் போட்டிகளில் போட்டியிட்டு தேசிய மட்டப் போட்டிகளுக்குப் பலமுறை சென்று வெற்றியும் பெற்றிருந்த போதிலும், சர்வதேச போட்டி ஒன்றில் பங்கு பற்றிய முதல் தடவையே வெள்ளிப்பதக்கம் பெற்றதை நினைத்து பெரும் மகிழ்ச்சியடைவதாகவும், இதுபோன்ற பல்வேறு சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்று, எமது மண்ணுக்குப் பெருமை சேர்ப்பதையே நான் விரும்புகிறேன் எனவும் கூறுகிறார்.

இத்தகைய வீரர்கள் வளர்ந்து, சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றுவதற்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் சாதனை நிலைநாட்டுவதற்கு இலகுவாக இருக்கும்.

தேசிய மட்டப் போட்டிகளிலும் சர்வதேச மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றுவதில் நிறைய வித்தியாசம் உண்டு. ஒவ்வொரு நாடுகளிலும் இருந்து வரும் வீரர்களுடன் பழகுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததை நினைத்து பெரும் மகிழ்வடைவதுடன், எம்மைப் போன்ற பல வீர வீராங்கனைகள் சர்வதேச தரம் வாய்ந்த போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு ஆர்வம் கொண்டு இருக்கின்றபோதிலும், அதற்கான வாய்ப்புக் கிடைப்பது என்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. திறமை இருக்கின்ற போதும் வாய்ப்பு கிடைக்காது போவதற்கு காரணம் ஏது எனத் தெரியவில்லை என்கிறார்.

எமது வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கு நிதி வசதி குறைவாக இருக்கின்ற போது, வீரர்கள் சர்வதேச அரங்கில் போட்டியிடுவதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகப் பெருமக்கள் உதவினால் எவ்வளவோ பெரியவிடயமாக இருக்கும் என்கிறார்.

- வர்மன்

# வெள்ளையரிடம் விட்டிருக்கலாம்

ஒக்ரோபர் மாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள SUPER SERIES தொடருக்கான இறுதி அணித் தெரிவுகள் முடிவடைந்துவிட்டன. இந்த வகையில் உலக டெஸ்ட் அணியின் தலைவராக தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் ஸ்மித்தும், ஒருநாள் அணித் தலைவராக தென்னாபிரிக்க அணியின் வீரர் ஷோன் பொலொக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொதுவாக இவ்வகை தெரிவுகளில் அபிப்பிராய பேதங்கள், சர்ச்சைகள் ஏற்படுவது ஒன்றும் புதிய விடயமே அல்ல. மேலும் எல்லோரையும் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு காரியத்தைச் செய்தல் என்பதும் சாத்தியமானதல்ல. இருந்தாலும் உலக அணியின் இருவகைக் கிரிக்கெட் அணிகளுக்கும் தென்னாபிரிக்க வீரர்களே அணித் தலைவர்களாக நியமிக்கப்படும் அளவிற்கு தெரிவுச் சபைத் தலைவர் கவாஸ்கர் சர்வதேச கிரிக்கெட் நாடுகளில் பெரும் வரட்சி நிலவுகிறது என்று எப்படித் தீர்மானித்தார் என்பது தான் ஜீரணித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது.


சௌரவ் கங்கூலி
உங்கள் தரம் அதிகம்

குறிப்பாக டெஸ்ட் அணிக்கு கிரேம் ஸ்மித் தலைமை வகிக்க எந்தளவு தகுதியானவர் என்பதை விட, வேறு சிலர் எந்தளவு கூடுதல் தகுதியுடையவர்கள் என்பதை ஆதாரபூர்வமாக அக்குவேறு, ஆணி வேறாக புட்டுப் புட்டு வைக்கும்போது அதனை மறுக்கத் தோன்றவேயில்லை.

ஒரு அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் விமர்சகர் கருத்துக் கூறும்போது – கிரேம் ஸ்மித் மற்றும் ஷோன் பொலக் இருவரையும் தெரிவு செய்வதில் எந்த அளவு கோல்கள் பயன்படுத்தப்பட்டன என்பது விளங்கவில்லை என்றும், அதேவேளை தெரிவில் ஒரு வெளிப்படைத் தன்மை காணப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

இவரது கருத்துப்படி சர்வதேச கிரிக்கெட் உலகில் கிரேம் ஸ்மித்துக்கும் அப்பால் இன்னும் சிலரைச் சுட்டிக்காட்டுகின்றார். இவரது தெரிவின்படி இங்கிலாந்தின் மைக்கல் வோண், இந்தியாவின் சௌரவ் கங்கூலி, பாகிஸ்தானின் இன்சமாம் உல்ஹக், நியூசிலாந்தின் ஸ்ரீபன் பிளெமிங் ஆகியோரை வரிசைப்படுத்துகின்றார். மைக்கல் வோண் கடந்த பதினைந்து மாதங்களாக அணித்தலைவராகவும், வீரராகவும் பெரும் வீச்சைக் காட்டியிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அண்மையிலேயே வோண் தென்னாபிரிக்காவில் வைத்து கிரேம் ஸ்மித்தின் தென்னாபிரிக்க அணியை 2–1 என்று டெஸ்ட் தொடரில் வென்றிருந்தார். மேலும் மைக்கல் வோணின் அவுஸ்ரேலியாவிற்கு எதிரான ASHES வெளிப்பாடு பற்றியும் கருத்திற்கொள்ள முயற்சித்திருக்கலாம் அல்லவா என்கிறார் அவர்.

இன்னொரு வகையில் இதுவரையில் கிரேம் ஸ்மித் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அவுஸ்ரேலியாவில் இரண்டே இரண்டு டெஸ்ட் போட்டிகள் மட்டுமே விளையாடியுள்ளார். ஆனால் இவரை விட ஏனையவர்கள் நிறைந்த அனுபவம் உடையவர்கள் என்பது வெளிப்படை. கிரேம் ஸ்மித்தின் அணித் தலைவர் பெறுபேற்றைப் பார்த்தால் பாகிஸ்தானில் பாகிஸ்தானுடன் தோல்வி, இங்கிலாந்துடன் தாயகத்தில் டெஸ்ட் தொடர் தோல்வி, இலங்கையுடனும், இந்தியாவுடனும் தோல்வி என்று வரிசை நீண்டு கொண்டே செல்கின்றது.


கிரேம் ஸ்மித்
தப்பா நினைக்கிறீங்க

இந்த நிலையில் அணித் தெரிவுக் குழுத் தலைவர் காட்டமாக விமர்சிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததே. ஏனெனில் சாதாரண ரசிகர்கள் கூட நிறைந்த கிரிக்கெட் அறிவு பெற்றவர்கள். அவர்கள் எதையும் சரியாக எடைபோடுபவர்கள். இந்த வகையில் ஊடகவியலாளர்களின் கருத்துடன் ரசிகர்கள் மறுப்பின்றி ஒத்துப்போகிறார்கள்.

கவாஸ்கர் ஏன் இப்படி பொருத்தமற்ற, பலவீனமான தெரிவொன்றைச் செய்தார் என்று இப்போது புரியவில்லை. இருந்தாலும் காலப் போக்கில் சில உண்மைகள் வெளிவரலாம். எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்போ யார் அறிவார்?


- நிர்மலன்.

# கண் பட்டதால் – உன் மேனி புண்பட்டதோ...?

"யானை படுத்தாலும் குதிரை மட்டம்" என்பது போல் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கரின் திறமை குறித்து அண்மைக் காலமாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்தாலும் அவர் மீதான மதிப்பும் மரியாதைக்கும் ஏன் எதிர்பார்ப்புக்கும் குறைவே இருப்பதில்லை.

சிம்பாப்வே சென்றுள்ள இந்திய அணி முத்தரப்பு ஒருநாள் தொடரை அடுத்து இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது. இந்த டெஸ்ட் போட்டிகளுக்கான அணியில் சச்சின் டெண்டுல்கரின் பெயரும் இடம்பெற்றிருந்தது. மூன்று மாத இடைவெளியின் பின்னர் அவர் மீண்டும் களமிறங்குவதனால், இதை விட ரசிகர்களுக்கு சந்தோசமான செய்தி வேறு இருந்திருக்காது. அவரின் உடற்தகுதி குறித்து பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் தலைதூக்கினாலும், இந்தத் தொடரில் அவர் கட்டாயம் ஆடவேண்டும் என்பதையே ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். இதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. ஒன்று பயிற்சிக்காக, மற்றையது சாதனைக்காக.

பயிற்சி என்ற வகையில் - இந்தத் தொடரில் சச்சின் சிறப்பாக ஆடி தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டால், அடுத்த மாதம் அவுஸ்ரேலியாவில் ICC முதன் முறையாக நடத்தவுள்ள SUPER SERIES இல் அவர் பிரகாசிப்பதற்கு எந்தத்தடையும் இருக்காது.



சச்சின் டெண்டுல்கர்
காலை வாரும் காலம்

சாதனை என்ற ரீதியில் - சச்சினும் சாதனைகளும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவை. அதனால்தான் அவர் எப்போது களமிறங்கினாலும் ரசிகர்கள் அவரிடமிருந்து பெரிதாக எதிர்பார்க்கின்றனர். இந்த வகையில் தான் சிம்பாப்வே தொடரிலும் அவர் மீதான எதிர்பார்ப்புகளும் அதிகரித்திருந்தன.

டெஸ்ட் போட்டிகளில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற எல்லா நாடுகளுக்கு எதிராகவும் சதம் அடித்தவர்கள் ஐவர் மட்டுமே. அவர்கள் வேறு யாருமல்ல. ஸ்ரீவ்வோ, ஹரி கோர்ஸ்ரன், சச்சின், ராவிட், அத்தப்பத்து ஆகியோரே. சச்சின் இந்தச் சாதனையை கடந்த வருடம் டிசம்பரில் பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தின் போது, தனது 34ஆவது சதத்தைப் பெற்றதன் மூலம் நிலைநாட்டியிருந்தார்.

ஆனால் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற எல்லா நாடுகளிலும் டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்த பெருமைக்குச் சொந்தக்காரராக விளங்குபவர் இந்திய அணியின் துணைத்தலைவர் ராகுல் ராவிட்.

டெண்டுல்கரைப் பொறுத்தவரை டெஸ்ட் போட்டிகளில் சிம்பாப்வே தவிர எஞ்சிய அனைத்து டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளிலும் சதம் அடித்துள்ளார். டெண்டுல்கர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் பெற்ற சதங்களின் எண்ணிக்கை 34. இதில் சிம்பாப்வேக்கு எதிராக அவர் அடித்த சதங்கள் மூன்று மட்டுமே. இந்த மூன்று சதங்களும் இந்தியாவிலேயே பெறப்பட்டிருந்தன.

2000/01 காலப்பகுதியில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக சிம்பாப்வே அணி இந்தியா வருகை தந்திருந்தது. இதில் புதுடெல்கியில் நடைபெற்ற முதலாவது போட்டியில் 122 ஓட்டங்களும், நாக்பூரில் நடை பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 201 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். பின்னர் 2001/02 காலப்பகுதியில் மீளவும் சிம்ப்ாப்வே அணி இந்தியா வருகை தந்தபோது, நாக்பூரில் நடைபெற்ற இன்னொரு போட்டியில் 176 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இது டெஸ்ட் போட்டியில் அவர் பெற்ற 28ஆவது சதமாக இருந்தது.

இதேவேளை 2001/02 இல் சிம்பாப்வே சுற்றுப்பயணத்தின் போது ஹராரேயில் பெற்ற 74 ஓட்டங்களே சிம்பாப்வேயில் டெண்டுல்கர் பெற்ற அதிகூடிய டெஸ்ட் ஓட்டமாக இருக்கின்றது. எனவே இங்கும் டெண்டுல்கர் ஒரு சதம் அடிக்க வேண்டுமென்பதில் அவரை விட ரசிகர்களுக்கு விருப்பம் அதிகமாயிருந்தது.

அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய சதம் குவித்த (34) கவாஸ்கரின் சாதனையை முறியடிக்க இன்னமும் அவருக்கு ஒரு சதம் மாத்திரமே தேவைப்படுகின்றது. எனவே சிம்பாப்வே தொடரில் டெண்டுல்கர் சதம் ஒன்று அடித்தால், அது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

இவ்விரு சாதனைகளையும் இந்தச் சுற்றுப்பயணத்தின் போது அவர் நிகழ்த்தி விடுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ரசிகர்களின் ஆசையை சிதறடிக்கும் வகையில், அவரின் உடற்தகுதி பூரண குணம் அடையாததால், இந்தத் தொடரில் அவர் பங்கேற்க முடியாமல் போயுள்ளது.

கவாஸ்கரின் சாதனையை இந்தத் தொடரைவிட்டாலும் வேறு ஒரு தொடரில் சதம் அடித்து முறியடித்துவிடலாம். ஆனால் சிம்பாப்வேயில் சதம் என்ற சாதனை தான் நிகழ முடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் ரசிகர்களுக்குத் தோன்றியுள்ளது. 32 வயதான டெண்டுல்கருக்கு இன்னொரு சிம்பாப்வே சுற்றுப் பயணம் அமையுமா என்பது சந்தேகமே.

ரசிகர்களின் தற்போதைய வேதனை சாதனைகள் பல படைத்த சச்சினின் சோதனைகள் தொடர்வதுதான்.

– விமலன்

# தங்க மகள் ஜொலிக்கிறாள்



மரியா ஷரபோவா
புடம்போட்டும் பயனில்லை

மரியா ஷரபோவா உலக மகளிர் ரெனிஸ் தரவரிசையில் முதல் இடம் பெற்ற மகிழ்ச்சியை எழுத முன்பே, மீண்டும் அமெரிக்காவின் லின்ட்ஸே டெவன்போட் மரியாவைச் சரித்து உலக தரவரிசை ஒன்றைப் பெற்றுவிட்டார். தற்போது கனெக்டிகட்டில் (ஐ.அமெரிக்கா) நடைபெற்று முடிவடைந்துள்ள WTA 60000 அமெரிக்க டொலர் போட்டிகளில் ரஷ்யாவின் அன்னா ஸக்வெடாட்ஸேயை அரையிறுதிப் போட்டியில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற போதே, மீண்டும் தரவரிசை ஒன்றுக்குத் தாவி விட்டார் லின்ட்ஸே டெவன் போட். 29 வயதான லின்ட்ஸே, ரஷ்ய வீராங்கனையைத் தோற்கடிக்க எடுத்துக்கொண்ட நேரம் வெறும் எழுபத்தியிரண்டு நிமிடங்கள் மட்டுமே. லின்ட்ஸே டெவன் போட்டின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத அன்னா 6-3, 6-3 என்று நேர் செட்களில் சுருண்டு விட்டார். இதில் என்ன வேடிக்கை என்றால் தோற்றது இந்த ரஷ்ய மங்கை மட்டுமல்ல, உலக முதல் தரவரிசையைக் கடந்த வாரம் தான் வென்ற மரியாவும் சட்டென்று இரண்டாம் இடத்திற்கு விழுந்துவிட்டார். இதேபோன்று ஒரு வாரக் கொண்டாட்டம் முன்பும் ஒரு தடவை நடந்திருந்தது. 2003ஆம் ஆண்டில் பெல்ஜியம் நாட்டு வீராங்கனை ஜஸ்ரின் ஹெனின் ஹார்டெய்ன் உலக தரவரிசை ஒன்றுக்கு உயர்த்தப்பட்டவேளை, சரியாக ஒரே வாரத்தில் அவரது நாட்டைச் சேர்ந்த கிம் கிளைஸ்டர்ஸ் தரம் ஒன்றைத் தான் தட்டிப் பறித்துக் கொண்டார்.

தனது மீள் முதன்மை பற்றிக் கருத்துக் கூறும் லின்ட்ஸே - இது இப்படித்தான் என்கிறார். இனி நான் எதிர்கொள்ளப்போவது அமெரிக்காவின் ஓபன் ரெனிஸ் சுற்றுப்போட்டி. இதில் நன்றாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் தரம் ஒன்று வரிசையைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்கிறார் அவர்.

முதன்மைவிடயம் ஒருபக்கம் இருக்க NEW HEAVEN OPEN WTA போட்டியில் லின்ட்ஸே டெவன் போட், பிரான்ஸின் அமெலி மௌறிஸ்மோவை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்று கொண்டார். முன்னர் இதே சுற்றுப்போட்டியில் நான்கு முறை இறுதிப் போட்டிக்கு வந்தும், லின்ட்ஸே டெவன் போட்டால் வெற்றிக் கிண்ணத்தை வென்று கொள்ள முடியவில்லை. ஆனால் இம் முறை முதல்தடவையாக லின்ட்ஸே கிண்ணம் வென்றிருக்கிறார்.



லின்ட்ஸே டெவன்போட்
பொன் மகள் வந்தாள்

இந்தப் போட்டி அமெரிக்கன் ஓபன் போட்டிக்கு எனக்கு நல்ல பயிற்சியைத் தந்தது. நான் மிக நம்பிக்கையுடன் அமெரிக்கன் ஓபன் போட்டிக்குச் செல்கிறேன் என்கிறார்.

அடுத்து அமெரிக்கன் ஓபன் போட்டிகளில் என்னென்ன வகையில் பரபரப்புகள் ஏற்படும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

– நிம்மி.

# மீண்டும் மன்னன் வருகிறான்

சினேடின் சிடானே உதைபந்தாட்ட உலகிற்கு இதயத்தோடு இணைந்த பெயர். இவர் சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தபோது, துயரப்படாதவர் எவரும் இல்லை. ஆனால் 2006 உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியைப் பொறுத்து பிரான்ஸ் நாடு எந்த நிலையில் நிற்கிறது என்பதை மதிப்பீடு செய்த சிடானே மீண்டும் பிரான்ஸ் தேசிய அணியின் தலைவராக வந்துள்ளார், வரவேற்கப்பட்டுள்ளார்.

இவர் இணைந்துள்ள விளையாட்டுக் கழகம் றியல் மட்ரீட் என்று கூறும்போதே அவரது கனதி என்னவென்பது ரசிகர்களுக்குப் புரியும். 33 வயதான சிடானே EURO 2004 போட்டிகளில் பிரான்ஸ் வெளியேறியவுடனேயே மிகவும் மனம் வருந்தி இந்தப் பின்னடைவுக்கு ஓரளவு தானும் காரணம் என்பதை ஏற்றுக் கொண்டு சர்வதேச உதைபந்தாட்டத்தில் இருந்து ஒதுங்கிக் கொண்டவர்.



சினேடின் சிடானே
மன்னவன் வந்தானடி

இப்போது பன்னிரண்டாவது முறையில் இவர் அணித் தலைமையை ஏற்றுக் கொள்கிறார். இருந்தாலும் நான் தலைமை பொறுப்பிற்குரிய எல்லா இலக்கணங்களையும் பூரணமாகக் கொண்டவனல்ல என்று தன்னடக்கத்துடன் சொல்லியிருக்கிறார். ஆனால் பிரான்ஸ் அணியின் ஏனைய வீரர்கள் அப்படி நினைக்கவில்லை. சிடானே சொல்வதை எல்லோரும் கேட்பார்கள். அவர் வார்த்தைக்கு நிரம்ப மரியாதை உண்டு. அவர் எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு நபர் என்று புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

உண்மையில் 2006 உலகக் கிண்ண உதைபந்தாட்ட பலமான அணியின் பட்டியலில் பிரான்ஸ் நாடு பின் தங்கித்தான் காணப்படுகின்றது என்பது பல உதைபந்தாட்ட விமர்சகர்களின் கருத்து. ஆனால் சிடானே போன்ற திறமையும் அதே வேளை மதிப்பும் மரியாதையும் நிறைந்த ஒரு வீரரின் கீழ் தொழிற்படும் அணியொன்று எந்த எல்லையைத் தொடும் என்று கூறிவிட முடியாது. ஆச்சரியங்கள் மந்திரவித்தைகளால் மட்டும் ஏற்படுபவை அல்ல.

– சிவலிங்கசிவரன்

**விளையாட்டு அரங்கம்**




EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



# தமிழ் பேசும் முஸ்லிம்கள் அனைவரும் தலைவர் பிரபாகரன் வழியில் செல்வோம்

## தேசிய எழுச்சி நிகழ்வில் எஸ்.எம்.சகீல்



கிளிநொச்சி—

வவுனியா பிரகடனத்தை நிறைவேற்ற தமிழ்பேசும் முஸ்லிம்மக்கள் தலைவர் பிரபாகரன் பின்னால் அணிதிரள வேண்டும் என- யாழ்ப்பாண இஸ்லாமிய மக்கள் பணிமனைச் செயலர் மௌலவி எஸ்.எம்.சகீல் வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆண்டாண்டு காலமாக ஆண்டுவந்த மண்ணையும், வீதிகளையெல்லாம் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் சுற்றிவளைத்தனர்.

சிங்கள அரசுகள் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டன. எங்களுடைய உரிமைகளை நாங்கள் பெற்று வாழ்வதற்குக்கூடத் தடைவிதித்தனர். அந்த நிலைமையில்தான் இந்தப் போராட்டம் உருவானது.

இந்தப் போராட்டத்தில் முஸ்லிம்கள் என்றும் சளைத்தவர்கள் அல்லர். தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்தவர்களாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற வரலாறுகளையும் நாங்கள் பார்க்கின்றோம்.

எங்களுடைய தாயக கடமை என்று புறப்பட்ட இந்தப் போராட்ட பயணத்திலே நாம் தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் கைகோர்த்தவர்களாக என்றும் செயற்படவேண்டும்.

தலைவர் பிரபாகரன் பின்னணியிலே தங்களுடைய வரலாற்றை தமிழர்கள் முன்னெடுத்துச் செல்கின்றார்கள். இது பாராட்டப் படக்கூடிய விடயம்.

நாம் நியாயத்தைப் பேசுகின்றோம். உண்மையை இந்த உலகுக்கு, இந்த மண்ணுக்கு, சர்வதேசத்துக்கு நாங்கள் புலப்படுத்துகின்றோம்.

ஆனால், நாங்கள் ஓர் குடும்ப உறவைக் கொண்டவர்கள் தமிழ் மக்களும், முஸ்லிம் சமூகமும் ஒரு குடும்ப உறவைக்கொண்டவர்கள். எங்களுக்குள் பல பிரச்சினைகள் எழலாம். அதனை நாங்களே தீர்ப்போம். எங்களுடைய குடும்பமே பேசித்தீர்த்துக்கொள்ள முடியும். இதற்குள் அந்நியர்களின் ஊடுருவல் எங்களுக்குத் தேவையில்லை.

வவுனியா எழுச்சி நிகழ்வில் எடுத்த முடிவுகளை நிறைவேற்ற தலைவர் பின்னால் அணிசேர தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தயாராக இருக்கிறார்கள் என அவர் மேலும் கூறினார்.

# சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் தமிழ் மொழிமூலமான போட்டிகள்

வவுனியா—

சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு வடக்கு- கிழக்கு மாகாணத்தில் போட்டிகளை நடத்த தேசிய ஓசோன் அமைப்பு முன்வந்துள்ளது.

இந்த போட்டியில் முதலில் நேற்று வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ்மொழி மூலமான போட்டிகள் நடைபெற்றன.

இந்த போட்டியில் வெற்றி பெறுவோருக்கு சர்வதேச ஓசோன் தினமான எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் விழாவில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என தேசிய ஓசோன் அமைப்பு தெரிவித்துள்ளது.

# மீனவர் சங்கத்திலிருந்து எடுத்துவரப்பட்ட எரிபொருள் பொலிஸாரால் பறிமுதல்

மன்னார்—

தலைமன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மீனவர்களின் படகுகளுக்காக எடுத்துச் செல்லப்பட்ட 2 ஆயிரத்து 100 லீற்றர் எரிபொருள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை கூட்டுறவுச் சங்க லொறியில் எரிபொருளை எடுத்துச் சென்ற போது, வழிமறித்த பொலிஸார் உரிய ஆவணங்கள் இன்றி எரிபொருள் எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறி கூட்டுறவுச் சங்க ஊழியர் இருவரைக் கைதுசெய்ததுடன், 2 ஆயிரத்து 100 லீற்றர் டீசலையும் பறிமுதல்செய்தனர்.

இதையடுத்து கைதுசெய்யப்பட்ட ஊழியர்கள் இருவரும் மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லா முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர்ப் படுத்தப்பட்டனர். இருவரையும் சொந்தப் பிணையில் நீதிபதி விடுதலை செய்தார்.

செப்ரெம்பர் 3ஆம் திகதி இருவரையும் நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும், பறிமுதல் செய்யப்பட்ட எரிபொருளை பாதுகாத்து வைக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

தலைமன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 85 மீன்பிடி படகுகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுவந்தது. இதன் மூலம் 250 மீனவ குடும்பங்கள் பயனடைந்து வந்தன.

தற்போது எரிபொருள் பறிமுதல் செய்யப்பட்டதையடுத்து, கூட்டுறவுச் சங்கம் பெரும் இன்னலை எதிர்நோக்கியுள்ளது. இதனல் அந்தப் பகுதி கடற்றொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடமைப்புத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டரை லட்சம் ரூபா செலவில் வீடமைத்துக் கொடுக்கும் வேலைத் திட்டத்தை வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தினர் நடைமுறைப்படுத்தி வருவதாக முல்லைத்தீவு மாவட்ட வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் சி.சிவஜெயந்தன் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3 கிராமங்களும், புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 4 கிராமங்களும் -

ஒட்டுசுட்டான் பிரதேச உதவி அரச அதிபர் பிரிவில் 4 கிராமங்களும், துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் 4 கிராமங்களும், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் 4 கிராமங்களுமாக மொத்தம் 19 கிராமங்களில் இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுவருகின்றது.

இந்தத் திட்டத்தில் 512 வீடுகளுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டுறவாளர்களுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு—

வ்வுனியாவில் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக முல்லைத்தீவில் நடைபெறவுள்ள எழுச்சி நிகழ்விற்கான சகல கூட்டுறவாளர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் கரைதுறைப்பற்று பிரதேச கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு நடைபெற்றது.

தமிழ் தேசிய எழுச்சிக்குழுத் தலைவர் இ.கிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மோ.சிவமயம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செயலாளர் வேதவனம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஆலோசனைகளையும், கருத்துரைகளையும் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் மற்றும் தலைவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் பெருமளவு கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கோணார்பண்ணை பகுதியிலுள்ள கடற்படை முகாமை அகற்ற கோரிக்கை!

மன்னார் - கோணார் பண்ணையில் அமைந்துள்ள கடற்படை முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு - வன்னி அபிவிருத்தி அமைச்சர் ரிசாத் பதியுதீன், மன்னார் அரசாங்க அதிபரிடம் கேரிக்கை விடுத்துள்ளார்..

இந்த இடத்தில் வாழ்ந்து வந்த சுமார் 40 குடும்பங்கள் தற்போது வேறு இடங்களில் குடிபெயர்ந்துள்ளன. இந்த நிலையில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து அமைச்சர் இதற்கான வேண்டுகோளை மன்னார் அரசாங்க அதிபரிடம் விடுத்துள்ளார்.

இதேவேளை மக்கள் மீளக் குடியேறும் வகையில் கோணார் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமை அகற்றி அதனை வேறு ஒரு இடத்தில் அமைப்பதற்கான 12 இலட்சம் ரூபாவை ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

# காலச் சுவட்டில்,,,

**செப்ரெம்பர் - 4** **இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை**

1782 : கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகத்தைப் பிரித்தானியரிடம் இருந்து பிரான்ஸியர் கைப்பற்றினர். 1785 ஆம் ஆண்டுவரைக்கும் இந்தத் துறைமுகம் பிரான்ஸியரது கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

1882 : டாக்டர் எஸ்.எஸ்.வீலர் என்பவரால் நியூயோர்க் நகரில் முதன்முதலாக மின்விசிறி வடிவமைக்கப்பட்டது.

1909 : சாரணர்களது முதலாவது அணிவகுப்பு லண்டனில் கிரிஸ்டல் பலஸில் நடைபெற்றது.

1914: லண்டன் உடன்படிக்கை ஏற்பட்டது. பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ஏனைய நாடுகளுடன் தனித்தனியாக சமாதான உடன்படிக்கை எதுவும் செய்துகொள்வதில்லை என்று கூறும் இந்த உடன்படிக்கையைச் செய்துகொண்டன.

1917 : அமெரிக்க இராணுவத்தினருக்கு முதலாவது களப்பலி ஏற்பட்டநாள். முதலாவது உலகயுத்த நடவடிக்கையின் போது, பிரிட்டிஸ் தள மருத்துவமனை ஒன்றை ஜேர்மனி விமானப்படை தாக்கியது. இதில் மருத்துவமனையில் இருந்த 13 அமெரிக்க இராணுவத்தினர் பலியாகினர்.

1917 : இத்தாலிக்கு உதவி செய்வது பற்றி ஆராய்வதற்காக லண்டனில் - பிரிட்டனும், பிரான்ஸும் கலந்துரையாடின.

1918 : நிலக்கரிப் பற்றாக்குறையால் இத்தாலி தனது ஆயுத தளபாட உற்பத்திகளை முற்றாக நிறுத்தியது.

1918: ஆயுத தளபாட உற்பத்திகளில் ஈடுபட பெண்கள் பெருமளவில் முன்வரவேண்டும் என அமெரிக்க போர் வாரியம் பகிரங்க அழைப்பு விடுத்தது.

1918: லெனினைக் கொலைசெய்ய முயன்றார் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட புரட்சி வீரர் தோரா கப்லான் என்பவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1940: அமெரிக்காவில் கொலம்பியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பைச் செய்து காட்டியது.

1944: பின்லாந்தும், ரஷ்யாவும் போர்நிறுத்தம் செய்துகொண்டன. பின்லாந்து ஜேர்மனியுடன் இராஜதந்திர தொடர்பை முறித்துக்கொண்டது.

1951: வாழ்க்கை தொட்டில், காட்டில் புன்னகை ஆகிய நாவல்கள் மூலம் புகழ்பெற்ற அமெரிக்க நாவலாசிரியரான லூயிஸ் அடாமிக் தற்கொலை செய்துகொண்டார்.

1956 : ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு விமானங்கள், ஆயுத தளபாடங்களைக் கொடுத்துதவ சோவியத் யூனியன் சம்மதம் தெரிவித்தது.

1974: சிக்கிம் மாநிலத்தை இந்தியாவுடன் இணைத்துக்கொள்ள வகைசெய்யும் அரசியல் சட்டத்திருத்தத்தை இந்திய அரசு மேற்கொண்டது.

1975: இஸ்ரேலும், எகிப்தும் சினாய் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

1985: அத்திலாந்திக் கடலில் மூழ்கிப்போன டைட்டானிக் கப்பல் தொலையுணர்வுக் கருவி மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டது.

1994: உலகிலேயே முதன் முதலாக செயற்கைத் தீவில் கட்டப்பட்ட விமான நிலையம் திறந்துவைக் கப்பட்டது.

1994: ஒஸாகா நகருக்கு தென் மேற்கில்,ஒ ஸாகா குடாவில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தீவில், கன்சாய் சர்வதேச விமான நிலையம் திறந்துவைக் கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

செவிக்குஉணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்.

- திருவள்ளுவர்

## நமது நோக்கு

# எவர் ஜனாதிபதி ஆனாலும் எம்நிலை மாறப்போவதில்லை!

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே களமிறங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரையும்விட, மூன்றாவது நபர் ஒருவரைக் களமிறக்கும் முயற்சியில் அதிதீவிர பௌத்த சிங்கள இனவாத அமைப்புக்கள் மிகத் தீவிரமாக இயங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த மூன்றாவது நபரைக் களமிறக்க முயல்வோர் ஏற்கனவே இந்தத் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்று ஒரு நிலைப்பாட்டுக்கு வரமுடியாது, நவீன பஞ்சசீலக் கொள்கைகளை முன்வைத்து, அதனை எவர் ஏற்றுக்கொள்வார்களோ அவர்களுக்கு ஆதரவை வழங்கத்தயார் என்று அறிவித்தல் பலகையை தொங்க விட்டுவிட்டு காத்திருக்கும் ஜாதிக ஹெல உறுமயக்காரரின் ஆதரவை இந்த மூன்றாவது நபருக்கு வழங்குமாறு கோரியுள்ளதாகவும் செய்திகள் வர ஆரம்பித்துள்ளன.

முன்னதாக கடந்த பொதுத்தேர்தலில் பத்து ஆசனங்களை வென்றெடுத்த ஜாதிக ஹெல உறுமயவினருக்கும், ஜே.வி.பியினருக்குமிடையேயான அரசியல் முரண் அல்லது பகை நிலையை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, ஜனாதிபதித் தேர்தலில் இரு தரப்பினரும் இணைந்து, தேசியவாதக் கட்சிகள் எனத் தங்களால் இனங்காணப்பட்டுள்ள ஏனைய பௌத்த சிங்கள பேரினவாதக்குழுக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு ஒரு பொது ஜனாதிபதி வேட்பாளரை தேர்தலில் நிறுத்துவதற்கான செயற்பாடுகளிலும் சில முக்கியஸ்தர்கள் தீவிரமாக முயன்றுவருவதாகவும் செய்திகள் அடிபடும் வேளையில் இந்த மூன்றாவது வேட்பாளர் விவகாரம் வெளிவந்துள்ளது.

இரு தினங்களின் முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பியினருக்குமிடையே நடைபெற்ற ரகசிய மற்றும் பரகசிய பேச்சுக்களின் பின்னர் மஹிந்தவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பதாக ஜே.வி.பி தரப்பிலிருந்து வெளியான வாய்மொழி மூலமான தகவல்கள் தெரிவித்த போதிலும், இன்னும் சில ஜே.வி.பியினரின் நிபந்தனைகள் தொடர்பான ராஜபக்ஷவின் கருத்துக்கள் தெரியவரும்வரை அது உறுதி செய்யப்படாத ஒன்றாகவுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பியுடனான பேச்சுக்களில் ராஜபக்ஷவின் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் இறுதி முடிவை தானே எடுக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளதாகவும், மீண்டும் ஒருமுறை நிபந்தனைகள் என்ற ஜே.வி.பியின் பொறிவலைக்குள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை தான் விழ விடப்போவதில்லையென அவர் உறுதியாகவுள்ளதாகவும் மேற்படி கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். அதேசமயம் - அவர்கள் சுதந்திரக்கட்சி, ஜே.வி.பியை உதறித் தள்ளிவிட்டு தனியாக போட்டியிடுவதே கட்சியின் தனித்துவத்திற்கு நல்லதென்றும் வலியுறுத்தி வருகிறார்களாம்.

எனினும், இதுதொடர்பாக ஜனாதிபதி தரப்பிலிருந்து தீர்க்கமான கருத்து எதுவும் வெளிப்படாத நிலையில், மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தன்னிச்சையாக, தீவிரமாகத் தொடர்ந்து வருவதாக கூறப்படுகிறது.

ஜே.வி.பியின் ஆதரவை மஹிந்த இறுக்கமாக பற்றிக்கொள்ளும் சூழல் ஏற்படின், அவர் ஜனாதிபதியின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பார் என்று கூறமுடியாது. அதேபோல் அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட நேரிட்டால், அதன்பின்னர் அவர் ஜே.வி.பியினரின் விருப்பப்படி ஆட்சியைத் தொடரவேண்டிய அவலமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளான இந்தக் குழப்பநிலையை மேலும் சிக்கலாக்க திட்டங்களைப் போட்டுவரும் ஐக்கிய தேசியக்கட்சி தனது வாக்குவங்கியை சிதறவிடாது பாதுகாப்பதிலும், அக்கறையாக செயற்படும் தருணத்தில்தான் இருமுனைப்போட்டி மும்முனைப் போட்டியாகும் சூழல் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சரி, அதி தீவிரவாத, பேரினவாத சக்திகள் களமிறங்கத் துடிக்கும் அந்த மூன்றாவது நபர் யாரெனப்பார்ப்போம் -

அவர் வேறுயாருமல்ல முன்னாள் இராணுவ அதிகாரியும், மேஜர் ஜெனரல் தரத்தை கொண்டவரும், அவுஸ்ரேலியாவுக்கான தற்போதைய இலங்கைத் தூதரும், தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட மிக மோசமான உளவியல் நடவடிக்கைகளின் சூத்திரதாரியும் பௌத்த சிங்கள இனவாதியுமான "ஜானகபெரேரா"வே தான்.

சிறிலங்காவின் இறைமையைப் பாதுகாக்கவும், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைப் பலப்படுத்தவும் பௌத்தசிங்கள மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவுமே இந்த மூன்றாவது வேட்பாளரை 36 நாடுகளிலுள்ள சிங்கள அமைப்புகள் ஒன்றிணைந்து ஹெல உறுமய பிக்குகளின் ஆதரவுடன் களமிறக்கப்போவதாகக் கூறப்படுகிறது.

யாழ்.குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் போனவர்கள் பட்டியலில் இணையக் காரணமானவர்களில் இவரும் ஒருவர் எனக் கூறப்படுவதுண்டு.

எதுவானாலும், நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் - பேரினவாதிகளுள் யார் மோசமான பேரினவாதி என்பதை தேர்வு செய்வதற்கான தேர்தலாகவே கருதமுடியும்.


இதில் தெரிவாகும் நபர் எவராக இருந்தாலும் அவர் பௌத்த சிங்கள மக்களின் ஆதரவுடன் அவர்களின் அபிலாஷைகளையும், தமது சொந்த அரசியல் அபிலாஷைகளையும் இலக்குவைத்து நகரும் ஒருவராகவே இருப்பார் என்பதில் ஐயமில்லை.

சொல்லில் சமாதானமும் செயலில் பேரினவாதமும் இருக்கும் எவருமே தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைக்கும் நியாயமான, உறுதியான தீர்வை மனப்பூர்வமாக வைக்கப்போவது கிடையாது.

இது வரலாறு கற்றுத்தந்துள்ள பாடம். இந்த வரலாறே தொடர்ந்தும் நிகழப்போகிறது என்பதையே இந்த ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களுக்கு உணர்த்தப்போகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஜனாதிபதி தெரிவாக வேண்டும்

ஜனாதிபதி தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது. சவால், சவாலுக்குச் சவால் விடத் தொடங்கிவிட்டார்கள். ஜே.வி.பியினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிக்காட்ட முடியுமா? என்று ஐக்கிய தேசியக் கட்சி சவால் விட்டது. இந்தச் சவாலுக்குப் பதில் ஜே.வி.பி. சவால் விட்டிருக்கிறது. இன்னும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான திகதி அறிவிக்கப்படவில்லை. வேட்பு மனுத் தாக்கலுக்குப் பின்னர் தானே இன்னும் சவால்களைப் பார்க்கலாம் என்று சொல்லிக் கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

தேர்தல் காய்ச்சல் உம்மையும் பீடித்துக்கொண்டதோ என்று கேட்டேன்.

யாரைத்தான் இது விடப்போகுது? ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி சார்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ச வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவ்வருடம்தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லிவிட்டதும் சந்திரிகா அம்மையார் இவ்வாண்டுடன் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெறுவது உறுதியாகிவிட்டது. பிரதமர் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதும் உறுதியானது. ஏற்கனவே போட்ட திட்டப்படி அம்மையார் சீனாவுக்குப் போனார். புதிய வெளியுறவு அமைச்சராகப் பதவியேற்றிருந்த தம்பி அனுராவும் அக்காவின் பின்னால் சீனாவுக்குப் போனார். ஏற்கனவே ஜனாதிபதி பதவிக்காகப் பிரசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க ஈடுபடத் தொடங்கியிருந்தார். மகிந்த சும்மா இருக்கமுடியுமா? சுதந்திரக் கட்சியிலிருந்து ஜே.வி.பி. விலகியிருந்தாலும், மகிந்தவுக்கும், ஜே.வி.பிக்கும் உறவு விட்டுப்போகவில்லையே. இருதரப்புக்குமிடையில் பேச்சு நடந்தது. சில நிபந்தனைகளுடன் மகிந்தவை ஆதரிப்பதாக ஜே.வி.பி. தெரிவித்திருந்தது என்று சொன்னேன்.

ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு அவர்களின் ஆதரவை மகிந்த பெற்றுக்கொள்வது சந்திரிகா அம்மையாருக்குப் பிடிக்கவில்லையாம். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்த பின் அவர்கள் விடுத்த நிபந்தனைகள், அவர்கள் விடுத்த மிரட்டல்கள் எல்லாம் அம்மையார் நன்கறிந்தவையே!

அம்மையார் இப்படித் தெரிவித்திருப்பதை அறிந்ததும், விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல், மகிந்தவை ஆதரிக்கும் பேச்சுக்கள் இன்னும் முற்றுப் பெறவில்லையென்று இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அனுரகுமார தெரிவித்திருக்கிறார். இதேசமயம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், தமிழர் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து வெளிநாட்டாரின் உதவியின்றிப் பேச்சு நடத்தப்போவதாகவும் மகிந்த சொல்லியிருந்தது உமக்கு நினைவிருக்கா என்று பரமசிவம் கேட்டார்.

பிரபாகரன் வேறு நாட்டிலிருந்து வரவில்லை. அவரும் இலங்கை மாதாவின் புதல்வர்தான். நானும் இலங்கை மாதாவின் மகன்தான். நாங்கள் இருவரும் பேசுவதற்கு வெளியாரின் உதவியோ தலையீடோ எதற்கு என்று முன்பு பிரேமதாசாவும்கூடக் கேட்டிருந்தார். ஜே.ஆரும் இப்படிச் சொன்னதாக ஞாபகம். இதையேதான் இப்போது மகிந்தாவும் ஒரு பேச்சுக்குச் சொல்லியிருந்தார். இப்படிச்சொன்ன பின்னர்தான் ஜே.வி.பி ஆதரிக்க முன்வந்திருப்பது நினைவுக்கு வந்திருக்கிறது. ஜே.வி.பியோ விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதை எதிர்த்துக்கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்றும் பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதுதான் சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்பின் கொள்கை என்றும் பிரதமரின் அலுவலகம் விளக்கம் தெரிவித்திருக்கிறது என்று நான் சொன்னேன்.

இரண்டு பிரதான அரசியற்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தேசிய பிரச்சினையில் ஒரு பொதுக்கொள்ளையை வகுத்துச் செயற்படவேண்டும் என்று மல்வத்தை மகாநாயக்க தேரரும், அஸ்கிரிய மகாநாயக்க தேரரும் வலியுறுத்தியிருப்பதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்திருக்கிறது பார்த்தீரா என்று கேட்டார் பரமசிவம்.

ஆமாம். இரு பிரதான கட்சிகளும் தேசிய பிரச்சினையில் ஒரு பொதுத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் எனவும், இதனால் ஒரு நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை அடைந்து நாட்டில் அமைதியையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்தமுடியும் என்றும் மகாநாயக்கர்கள் தெரிவிக்கிறார்களாம். ஆனால், எவரும் இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுபற்றி எதுவும் சொன்னதாகத் தெரியவில்லை. இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு இருக்கும்வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கமாட்டாது என்பதை எவரும் இன்னமும் சொல்லத் துணியவில்லை என்றேன்.

விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டும். இலங்கையில் தமிழர் தாயகம் என ஒன்று இல்லை என்ற சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் பிடிவாதமாக இருக்கும்வரை நாட்டில் அமைதியோ, முன்னேற்றமோ ஏற்படமுடியாது என்பதை மகாநாயக்க தேரர்களும் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே சொந்தம் என்ற மனப்பான்மை நீங்கி, இந்த நாட்டு மக்கள் அவரவர் கலாசாரத்தையும், மொழியையும் பேணிப் பாதுகாத்து சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு ஓர் உடன்பாடு காணவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டால்தான் நாட்டில் அமைதியும், முன்னேற்றமும் ஏற்படும் என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

• ஜனாதிபதித் தேர்தல் கட்சி அரசியல் அடிப்படையில் கட்சியின் வெற்றியை நோக்கமாகக் கொண்டே நடக்கிறது. ஜனாதிபதி என்பவர் கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டின் ஒற்றுமையையும், சகல மக்களையும் பாரபட்சமற்ற வகையில் கணிக்கும் உயர்ந்த நிலையில் இருக்கவும் வேண்டிய உன்னத பதவி என்ற வகையில் தெரிவுசெய்யப்படவேண்டியவர். கட்சி அரசியல் நிலையில் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி எப்படிப் பொதுவாக இருக்கமுடியும் என்று நின்று சொல்லி விட்டுப் போனார் பரமசிவம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.
பிரதேச ரீதியாகத் தெரிவானோர்களின் விபரம் வருமாறு:

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2005
நிதித்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

**உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு**
**மூப்படிப்படையில் தெரிவானோர்**


நேற்றைய தொடர்ச்சி....

608 யா/உ/4139 திரு. மத்தேசு பாவிலுப்பிள்ளை
609 யா/உ/4148 திரு. நீலகண்டக்குருக்கள் சிவசுப்பிரமணிஐயர்
610 யா/உ/4152 திருமதி. பொன்னம்மா அப்புத்துரை
611 யா/உ/4155 திரு. காசிநாதர் கனகரத்தினம்
612 யா/உ/4171 திருமதி. தங்கம்மா சின்னத்தம்பி
613 யா/உ/4187 திரு. ஆழ்வான் தம்பையா
614 யா/உ/4188 திரு.கணபதிப்பிள்ளை கும்ாரசேகரம்
615 யா/உ/4190 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
616 யா/உ/4218 திருமதி. இராசலட்சுமி கணேசு
617 யா/உ/4231 திரு. சின்னத்தம்பி சபாநாயகம்
618 யா/உ/4243 திருமதி.செல்லமுத்து வயித்திலிங்கம்
619 யா/உ/4249 திருமதி.மேரிஅக்னிஸ் அந்தோனிமுத்து
620 யா/உ/4261 திருமதி. வள்ளியம்மை பொன்னுத்துரை
621 யா/உ/4272 திரு. முருகேசு ஜெகராசசிங்கம்
622 யா/உ/4277 திரு. கணபதி சீவரத்தினம்
623 யா/உ/4279 திருமதி. கேதாரகௌரி பஞ்சலிங்கம்
624 யா/உ/4292 திருமதி. சொர்ணம்மா இராசையா
625 யா/உ/4294 திருமதி. பரஞ்சோதி பரராஜசிங்கம்
626 யா/உ/4298 திருமதி.கனகம்மா தாமோதரம்பிள்ளை
627 யா/உ/4301 திரு. கணபதிப்பிள்ளை இரத்தினம்
628 யா/உ/4335 திரு. மாணிக்கம் வீரசிங்கம்
629 யா/உ/4339 திரு. இராமலிங்கம் அருணாசலம்
630 யா/உ/4340 திருமதி. ருக்மணி சுப்பிரமணியம்
631 யா/உ/4343 திரு. அரியமுத்து சிவபாதம்
632 யா/உ/4346 திருமதி.ஜோய் சந்திரமணி கனகராஜா
633 யா/உ/4369 திருமதி. சிவஞானம் குலசேகரம்பிள்ளை
634 யா/உ/4381 திரு. செல்லத்துரை அரியரத்தினம்
635 யா/உ/4392 திருமதி. நாகம்மா முத்துவேலு
636 யா/உ/4399 திருமதி. ஞானம்மா மார்க்கண்டு
637 யா/உ/4402 திரு. ஐயம்பிள்ளை விசுவலிங்கம்
638 யா/உ/4404 திரு. நாகலிங்கம் சுப்பிரமணியம்
639 யா/உ/4417 திரு. லட்சுமணர் நவரத்தினம்
640 யா/உ/4440 திரு. சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
641 யா/உ/4450 திருமதி. தங்கமலர் இரத்தினசபாபதி
642 யா/உ/4461 திரு. வல்லிபுரம் சிங்கராசா
643 யா/உ/4465 திரு. முருகேசு இரத்தினம்
644 யா/உ/4484 திரு. செல்லத்துரை சிவசுப்பிரமணியம்
645 யா/உ/4486 திரு. அரசரட்ணம் கதிர்காமர்
646 யா/உ/4498 திரு. இராசு சிங்கராசா
647 யா/உ/4501 திரு. சீனிவாசகம் ஞானசிவம்
648 யா/உ/4503 திருமதி. இராசமணி கந்தையா
649 யா/உ/4517 திரு. நாகலிங்கம் வீரசிங்கம்
650 யா/உ/4529 திருமதி. பரமேஸ்வரி சிவகுமாரன்
651 யா/உ/4539 திரு. கணபதிப்பிள்ளை சுவாமிநாதன்
652 யா/உ/4545 திரு. கந்தையா நடராசபிள்ளை
653 யா/உ/4553 திருமதி. கண்மணி முத்தையா
654 யா/உ/4556 திரு. சின்னக்குட்டி சின்னத்தம்பி
655 யா/உ/4565 திரு. ஐயாத்துரை தியாகராசா
656 யா/உ/4569 திருமதி. சிவபாக்கியம் செல்லையா
657 யா/உ/4592 திரு. வைரவி அண்ணாமலை
658 யா/உ/4595 திரு. சுப்பையா தேவசகாயம் வின்செண்ட்
659 யா/உ/4604 திருமதி. மகிழ்வதி இரத்தினசிங்கம்
660 யா/உ/4608 திரு. கதிர்காமர் கனகசபை
661 யா/உ/4610 திரு. தம்பையா சுப்பிரமணியம்
662 யா/உ/4613 திருமதி. ரெத்தினம் குணரத்தினம்
663 யா/உ/4616 திருமதி. அன்னலட்சுமி பேரின்பநாயகம்
664 யா/உ/4635 திரு. தம்பையா குலசிங்கம்
665 யா/உ/4650 திரு. புதியான் சீனியர்
666 யா/உ/4664 திரு. மார்க்கண்டு சிவசுப்பிரமணியம்
667 யா/உ/4674 திரு. துரையப்பா சிவகுரு
668 யா/உ/4690 திரு. கந்தையா இராசையா
669 யா/உ/4691 திருமதி. அம்பிகாதேவி முத்துலிங்கம்
670 யா/உ/4693 திரு. சரவணமுத்து குமாரசாமி
671 யா/உ/4700 திரு. இளையதம்பி முருகையா
672 யா/உ/4702 திருமதி. சரசுவதி பசுபதி
673 யா/உ/4704 திருமதி. இராசம்மா நடராஜா
674 யா/உ/4713 திருமதி. மனோன்மணி செல்லத்துரை
675 யா/உ/4721 திரு. தம்பிமுத்து கனகசபை
676 யா/உ/4727 திரு. இளையதம்பி தம்பிஐயா
677 யா/உ/4728 திரு. நல்லையா பாலசிங்கம்
678 யா/உ/4731 திருமதி. திரவியலட்சுமி நடேசன்
679 யா/உ/4736 திருமதி. விஜயலக்சுமி சின்னராசா
680 யா/உ/4738 திரு. சுந்தரம் கணேசன்
681 யா/உ/4742 திருமதி. சின்னமணி இராசரத்தினம்
682 யா/உ/4747 திரு. விசுவலிங்கம் கார்த்திகேசு
683 யா/உ/4761 திரு. நாகமுத்து நித்தியானந்தம்
684 யா/உ/4768 திருமதி. மகேஸ்வரி வேலுப்பிள்ளை
685 யா/உ/4769 திரு. இராமநாதன் திருநாவுக்கரசு
686 யா/உ/4771 செல்வி. சாந்தினி நடேசன்
687 யா/உ/4774 திரு. சோமசுந்தரம் கந்தசாமி
688 யா/உ/4785 திருமதி. சிவசித்திரபூபதி இராசரட்ணம்
689 யா/உ/4807 திரு. கதிர்காமு துரைபத்மநாதன்
690 யா/உ/4816 திரு. சின்னத்தம்பி சொக்கலிங்கம்
691 யா/உ/4817 திரு. தவசி சின்னவன்
692 யா/உ/4823 திருமதி.அன்னபூரணம் சுந்தரமூர்த்தி
693 யா/உ/4832 திரு. முருகேஸ் பொன்னம்பலம்
694 யா/உ/4840 திரு. வைத்திலிங்கம் மாணிக்கராசா
695 யா/உ/4858 திரு. வின்னி விக்னராசா
696 யா/உ/4862 திருமதி. கண்ணகை இராசரத்தினம்
697 யா/உ/4863 திரு. கந்தர் செல்லத்துரை
698 யா/உ/4864 திரு. காரளபிள்ளை அரியரட்ணராஜா
699 யா/உ/4866 திருமதி. பூமணி சிவபாதம்
700 யா/உ/4873 திரு. சடையர் சின்னத்தம்பி
701 யா/உ/4875 திருமதி. நேசம்மா ஆசிர்வாதம்
702 யா/உ/4896 திரு. பீதாம்பரம் கனநாதன்
703 யா/உ/4912 திருமதி. சிவக்கொழுந்து செல்வன்
704 யா/உ/4942 திருமதி. கிளாரிஸ்ற் அபரஞ்சிதமலர் பேதுறுப்பிள்ளை
705 யா/உ/4943 திருமதி. பரமேஸ்வரி அப்புத்துரை
706 யா/உ/4968 திருமதி. இராசம்மா வல்லிபுரம்
707 யா/உ/4974 திரு. கந்தையா இரத்தினம்
708 யா/உ/4979 திரு. சிவசம்பு இராமநாதன்
709 யா/உ/4983 திரு. துரையப்பா தில்லையம்பலம்
710 யா/உ/4992 திரு. சின்னப்பு த்ருமலிங்கம்
711 யா/உ/4995 திருமதி. கனகம்மா நடராசா
712 யா/உ/4999 திரு. மாணிக்கர் சுப்பிரமணியம்
713 யா/உ/5003 திரு. தில்லையம்பலம் வல்லிபுரம்
714 யா/உ/5011 திரு. இளையதம்பி தியாகராஜா
715 யா/உ/5026 திரு.குமாரவேலு வேலாயுதப்பிள்ளை
716 யா/உ/5029 திரு. இளையதம்பி சண்முகம்
717 யா/உ/5051 திரு. தம்பிப்பிள்ளை இராமனாதன்
718 யா/உ/5060 திரு. சுப்பிரமணியம் சிவஞானம்
719 யா/உ/5067 திரு. வல்லிபுரம் இரத்தினம்
720 யா/உ/5072 திருமதி. பாக்கியம் கணபதிப்பிள்ளை
721 யா/உ/5074 செல்வன். இலங்கைநயாகம் விக்னேஸ்வரன்
722 யா/உ/5075 திருமதி.கண்ணம்மா வேலுப்பிள்ளை
723 யா/உ/5083 திரு. முருகேசு இலங்கைநாதன்
724 யா/உ/5091 திருமதி. சரசுவதி இராசரத்தினம்
725 யா/உ/5108 திரு. ஆறுமுகம் கந்தசாமி
726 யா/உ/5114 திருமதி. நாகம்மா நடராசா
727 யா/உ/5122 திரு. சற்குணம் மகாதேவன்
728 யா/உ/5141 திரு. கதிரவேல் இரத்தினம்
729 யா/உ/5142 திரு. சின்னையா துரைராசா
730 யா/உ/5159 திருமதி. ஞானம்மா இராசையா
731 யா/உ/5164 திரு. பொன்னம்பலம் இராசரத்தினம்
732 யா/உ/5167 திருமதி. தியோடோறா மனோரஞ்சிதமலர்
733 யா/உ/5186 திருமதி. கண்மணி தம்பிராசா
734 யா/உ/5188 திருமதி. பூரணம் கிருஸ்ணர்
735 யா/உ/5193 திரு. நட்சத்திரம் டானியல்
736 யா/உ/5208 திருமதி. நாகம்மா ஐயாத்துரை
737 யா/உ/5225 திரு. சபாபதி துரைச்சாமி
738 யா/உ/5235 திருமதி. திலகராணி அரியரத்தினம்
739 யா/உ/5259 திருமதி. பூமணி பொன்னுத்துரை
740 யா/உ/5271 திருமதி. சரஸ்வதி சிவஞானம்
741 யா/உ/5277 திருமதி. யோகம்மா குணரத்தினம்
742 யா/உ/5290 திருமதி. ருக்மணி பொன்னம்பலம்
743 யா/உ/5295 திருமதி. அரியமலர் வீரசிங்கம்
744 யா/உ/5296 திருமதி. நாகம்மா சோமசுந்தரம்
745 யா/உ/5305 திருமதி. தவமணி மார்க்கண்டன்
746 யா/உ/5314 திருமதி. இராசாத்திப்பிள்ளை சிவராமகிருஸ்னா
747 யா/உ/5318 திருமதி. சறோஜினிதேவி சிவப்பிரகாசம்
748 யா/உ/5321 திரு. கந்தையா செல்லையா
749 யா/உ/5333 திரு. சுப்பிரமணியம் நடராசா
750 யா/உ/5343 திரு. நாகலிங்கம் கந்தசாமி
751 யா/உ/5344 திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்
752 யா/உ/5353 செல்வி. கமலாதேவி சிவசங்கரப்பிள்ளை
753 யா/உ/5358 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
754 யா/உ/5359 திருமதி. இராசம்மா கணபதிப்பிள்ளை
755 யா/உ/5363 திருமதி. செல்லம்மா துரைசிங்கம்
756 யா/உ/5364 திரு. கதிரேசு வல்லிபுரம்
757 யா/உ/5369 திருமதி. பொன்னம்மா கதிரவேலு
758 யா/உ/5381 திரு. கந்தையா கிட்டப்பா
759 யா/உ/5388 திருமதி. சிவரூபராணி நாகரத்தினம்
760 யா/உ/5390 திருமதி. கனகம்மா பரமலிங்கம்
761 யா/உ/5423 திருமதி. பூரணம் சிவசுப்பிரமணியம்
762 யா/உ/5437 திரு. செல்லையா மாசிலாமணி
763 யா/உ/5438 திரு. சந்தியப்பிள்ளை வசந்தகுமார்
764 யா/உ/5439 திரு. நாகர் கந்தன்
765 யா/உ/5442 திரு. இளையதம்பி இராசையா
766 யா/உ/5443 திருமதி. கமலம் குமாரசாமி
767 யா/உ/5448 திருமதி. நாகேஸ்வரி முருகேசு
768 யா/உ/5451 திருமதி. சாரதா செல்லத்துரை
769 யா/உ/5452 திரு. இளையதம்பி சந்திரசேகரம்
770 யா/உ/5462 திரு. சுந்தரம் முத்துக்குமாரு
771 யா/உ/5464 திரு. வேலுப்பிள்ளை அம்பலவாணர்
772 யா/உ/5469 திரு. முத்து செல்லத்துரை
773 யா/உ/5470 திரு. சின்னத்தம்பி தம்பிராசா
774 யா/உ/5474 திருமதி. தவமணி அப்புத்துரை
775 யா/உ/5490 திரு. கார்த்திகேசு பொன்னம்பலம்
776 யா/உ/5516 திருமதி. சரஸ்வதி இரத்தினம்
777 யா/உ/5519 திருமதி. சரஸ்வதி சிவராசலிங்கம்
778 யா/உ/5530 திரு. கந்தர் இராமு
779 யா/உ/5532 திருமதி. நாகம்மா சிவகுரு
780 யா/உ/5539 செல்வி. இராசம்மா சின்னையா
781 யா/உ/5557 திருமதி. இலட்சுமி இரத்தினம்
782 யா/உ/5570 திரு. சின்னப்பு தருமலிங்கம்
783 யா/உ/5579 திரு. திரவியம் சிவராசா
784 யா/உ/5600 திரு. கனகசேகரன் முருகையா
785 யா/உ/5603 திருமதி. அம்பிகை இரத்தினம்
786 யா/உ/5609 திரு. தம்பு வேலுப்பிள்ளை
787 யா/உ/5611 திருமதி. காமாட்சிப்பிள்ளை நடராசா
788 யா/உ/5617 செல்வி. ரதினிதேவி வேலாயுதபிள்ளை
789 யா/உ/5637 திருமதி. அதேலம்மா சூசைப்பிள்ளை
790 யா/உ/5639 திரு. சின்னத்துரை பரிசோதலிங்கம்
791 யா/உ/5643 திரு. வேலுப்பிள்ளை நாகரட்ணம்
792 யா/உ/5651 திருமதி. மீனாட்சி செல்லையா
793 யா/உ/5675 திருமதி. குட்டி இளையவி
794 யா/உ/5686 திருமதி. சிவபாக்கியம் சண்முகம்
795 யா/உ/5697 திருமதி. பார்வதி ஐயாத்துரை
796 யா/உ/5698 திரு. சின்னையா இரத்தினம்
797 யா/உ/5702 திரு. அருமைநாயகம் அன்ரன்
798 யா/உ/5704 திரு. குமாரவேலு மதியாபரணம்
799 யா/உ/5707 திருமதி. திலகவதி இளயதம்பி
800 யா/உ/5709 திருமதி. தங்கரத்தினம் செல்லத்துரை
801 யா/உ/5717 திருமதி. நல்லம்மா கனகசபை
802 யா/உ/5722 திருமதி. சின்னம்மா தம்பிமுத்து
803 யா/உ/5724 திரு. செல்லையா இரத்தினசிங்கம்
804 யா/உ/5727 திரு. தம்பு வைத்திலிங்கம்
805 யா/உ/5733 திருமதி. கனகம்மா ஆறுமுகம்
806 யா/உ/5737 திரு. சீனிவாசன் பொன்னுத்துரை
807 யா/உ/5739 திருமதி. பூரணப்பிள்ளை செல்லப்பா
808 யா/உ/5743 திருமதி. மனோகரி சிவப்பிரகாசம்
809 யா/உ/5750 திரு. சிற்றம்பலம் சா்ம்பசிவம்
810 யா/உ/5751 திருமதி. சின்னம்மா இராசேந்திரம்
811 யா/உ/5755 திரு. தம்பிப்பிள்ளை இராசரத்தினம்
812 யா/உ/5772 திரு. சின்னத்தம்பி வடிவேலு
813 யா/உ/5777 திரு. ஆறுமுகம் தம்பியப்பா
814 யா/உ/5784 திரு. நடராசா தில்லைநாயகம்
815 யா/உ/5786 திருமதி. இராசம்மா சிவலிங்கம்
816 யா/உ/5799 திருமதி. நாகம்மா பொன்னுத்துரை
817 யா/உ/5800 திரு. பொன்ன்ம்பலம் குமாரசிங்கம்
818 யா/உ/5812 திருமதி. நல்லம்மா முருகேசு
819 யா/உ/5813 திருமதி. நாகம்மா தம்பிமுத்து
820 யா/உ/5824 திருமதி. அன்னபாக்கியம் இராமலிங்கம்
821 யா/உ/5827 திரு. முருகேசு நவரெத்தினம்
822 யா/உ/5837 திரு. கணபதிப்பிள்ளை சண்முகம்
823 யா/உ/5861 திரு. செல்லப்பா சுப்பையா
824 யா/உ/5864 செல்வி. புனிதவதி கந்தையா
825 யா/உ/5891 திருமதி. சிவமலர் துரைராசா
826 யா/உ/5896 திரு. லோறன்ஸ் அரியநாயகம்
827 யா/உ/5901 திரு. தம்பிஐயா சிவலிங்கம்
828 யா/உ/5903 திரு. பொன்னையா தியாகராஜா
829 யா/உ/5912 திருமதி. நாகம்மா நாகர்
830 யா/உ/5920 திருமதி. செல்லம்மா தளையசிங்கம்
831 யா/உ/5925 திருமதி. வடிவாம்பிகை சிவசுப்பிரமணியம்
832 யா/உ/5927 திரு. சிற்றம்பலம் வேலுப்பிள்ளை
833 யா/உ/5932 திரு. மயில்வாகனம் தருமலிங்கம்
834 யா/உ/5936 திருமதி. மீனாட்சி பாலசுப்பிரமணியம்
835 யா/உ/5972 திரு. சீனியப்பா இராஜரட்ணம்
836 யா/உ/5975 திருமதி. திருவெங்கடவல்லி ஜெயசிங்கம்
837 யா/உ/5977 திரு. கந்தன் ஐயாக்குட்டி
838 யா/உ/5983 திரு. மாதன் மாணிக்கம்
839 யா/உ/6005 திரு. கந்தர் அரியதுரை
840 யா/உ/6024 திருமதி. பிலுப்பாச்சி ஜேம்ஸ்
841 யா/உ/6062 திருமதி. கனகம்மா துரைஐயா
842 யா/உ/6107 திரு. நாகலிங்கம் யோகராசா
843 யா/உ/6129 திரு. மார்க்கண்டு செல்வரத்தினம்
844 யா/உ/6134 திருமதி. மஞ்சுளாதேவி சிவானந்தன்
845 யா/உ/6167 திரு. வைத்திலிங்கம் இரத்தினம்
846 யா/உ/6180 திரு. செல்லத்துரை வீரசிங்கம்
847 யா/உ/6204 திரு. மாரிமுத்து செல்லப்பா
848 யா/உ/6205 திரு. சுப்பிரமணியம் நடராசா
849 யா/உ/6216 திருமதி.இரட்ணேஸ்வரி செல்லையா
850 யா/உ/6219 திருமதி. சரஸ்வதி சுப்பையா
851 யா/உ/6230 திருமதி. செல்லம்மா செல்லத்துரை
852 யா/உ/6240 திருமதி. ஞானமலர் குணநாயகம்
853 யா/உ/6274 திருமதி. பொன்னம்மா சதாசிவம்
854 யா/உ/6296 திருமதி. நாகேஸ்வரி செல்லப்பா
855 யா/உ/6304 திருமதி. அழகரத்தினம் தம்பிராசா
856 யா/உ/6305 திரு. பொன்னையா இராசையா
857 யா/உ/6317 திருமதி. அன்னம்மா துரைச்சாமி
858 யா/உ/6329 திரு. கந்தர் சின்னத்தம்பி
859 யா/உ/6330 திருமதி. இராஜபூவதி சிவநம்பிகை
860 யா/உ/6331 திருமதி. சிவக்கொழுந்து சத்தியநாதன்
861 யா/உ/6335 திருமதி. ரத்தினம்மா வைரவநாதன்
862 யா/உ/6342 திருமதி. சரஸ்வதி செல்லத்துரை
863 யா/உ/6372 திருமதி.பொன்னம்மா செல்லத்துரை
864 யா/உ/6379 திரு. ஜோசப் பரமானந்தம்
865 யா/உ/6396 திரு. விசுவலிங்கம் இராசரத்தினம்
866 யா/உ/6401 திரு. வைத்திலிங்கம் மார்க்கண்டு
867 யா/உ/6411 திரு. அப்பையா இராசநாயகம்
868 யா/உ/6418 திருமதி. பாக்கியம் நாகலிங்கம்
869 யா/உ/6420 திருமதி. இராசம்மா கந்தையா
870 யா/உ/6430 திருமதி. அனனம்மா செல்வரட்ணம்
871 யா/உ/6443 திரு. வைரமுத்து சிவனடியார்
872 யா/உ/6445 திரு. மரியான் பேதுரு யுவானி
873 யா/உ/6447 திருமதி. சின்னாச்சி காத்தி
874 யா/உ/6464 திருமதி. கனகம்மா பொன்னுத்துரை
875 யா/உ/6480 திரு. அருளப்பு தேவசகாயம்
876 யா/உ/6502 திரு. இராமு இராசமணி
877 யா/உ/6503 திரு. சண்முகம் சின்னத்துரை
878 யா/உ/6505 திருமதி. பூமணி வல்லிபுரம்
879 யா/உ/6512 திருமதி. பூமணி மயில்வாகனம்
880 யா/உ/6540 திருமதி. நல்லம்மா ஐயாத்துரை
881 யா/உ/6552 திரு. மாரிமுத்து சத்தியநாதன்
882 யா/உ/6583 திரு. கணபதிப்பிள்ளை மகாலிங்கம்
883 யா/உ/6586 திரு. சிவகுரு பரமசிவம்
884 யா/உ/6587 திரு. சுப்பையா செல்வரத்தினம்
885 யா/உ/6599 திரு. பொன்னம்பலம் செல்லத்துரை
886 யா/உ/6605 திரு. ஞானப்பிரகாசம் தேவசகாயம்
887 யா/உ/6619 திருமதி.இரத்தினபூபதி சபாரத்தினம்
888 யா/உ/6635 திரு.கோவிந்தசாமி கோணேஸ்வரன்
889 யா/உ/6643 திரு. விஸ்வலிங்கம் பொன்னம்பலம்
890 யா/உ/6650 திரு. நடேசு புலேந்திரராசா

(தொடரும்)

நடிகர் விஜயகாந்தின்

# அரசியல் கட்சி தொடக்கவிழா 14 ஆம் திகதி மதுரையில்!



சென்னை —

விஜயகாந்தின் அரசியல் கட்சித் தொடக்கவிழா மற்றும் ரசிகர் மாநாடு எதிர்வரும் 14 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாநாட்டின் பாதுகாப்பிற்காக அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குத் தொண்டர் படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர் படையினர் ஆயிரம் பேருக்கு சென்னையில் இறுதிக்கட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னை கோயம்பேட்டிலுள்ள ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில் இரண்டு நாட்களாக தொண்டர் படையினர் பயிற்சிபெற்று வருகிறார்கள். அவர்க்ளுக்கு முன்னாள் இராணுவ வீரர் நடராஜன் அணி வகுப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளுக்கான பயிற்சியை அளித்து வருகிறார்.

நேற்றுக்காலை மண்டப வளாகத்தில் தொண்டர்களுக்கு பயிற்சி, அணிவகுப்பு நடைபெற்றது. இதை விஜயகாந் நேரில் பார்வையிட்டார். பின்னர் தொண்டர் படையினரைச் சந்தித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அவருடன் விஜயகாந்த் ரசிகர் மன்ற மாநில பொதுச் செயலாளர் ராமு வசந்தன், மாநில அமைப்புச் செயலாளர் பார்த்தசாரதி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர். பின்னர் விஜயகாந்த் நிருபர்களிடம் கூறியதாவது -

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் மதுரை மாநாட்டுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தீவிரமாக நடந்து வருகின்றன. 7 ஆம் திகதிக்குள் படத்தில் நான் நடிக்கவேண்டிய காட்சிகள் அனைத்தையும் முடித்துக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன். இப்போது படப்பிடிப்பிலிருந்துதான் தொண்டர்களைப் பார்ப்பதற்காக இங்கு வந்தேன்.

மாநாட்டு பாதுகாப்பிற்காக ஆயிரம் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்துள்ளோம். அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கும் தொண்டர் படையினருக்கு இரண்டு நாட்களாக சென்னையில் பயிற்சியளிக்கப்படுகிறது. தொடர்ந்து 9 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை மாநாட்டு வளாகத்தில் பயிற்சியளிக்கப்படும். மகளிர் தொண்டர் படையில் நூறுபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு மதுரையில் இரண்டுநாள் பயிற்சி அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

உலக நோக்கு

# எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் 3 கோள்கள் அருகருகே தோன்றும்!

சென்னை —

வானத்தில் அவ்வப்போது அரிய காட்சிகள் தோன்றுவது உண்டு. அதேபோல் இப்போது வியாழன், வெள்ளி ஆகிய கோள்களும் சந்திரனும் அருகருகே தோன்றும் காட்சி எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் நிகழவுள்ளது.

இது குறித்து பிர்லா கோளரங்க செயல் இயக்குநர் ஐயம்பெருமாள் கூறியதாவது -

சூரியனைச் சுற்றி கோள்கள் நீள் வட்டப் பாதையில் சுற்றுகின்றன. இப்போது வியாழன் கோள் கன்னிராசி மண்டலத்திலுள்ளது. வெள்ளி கோள் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சுற்றி வருகிறது. எனவே அது எப்போதும் சூரியனுக்கு அருகில்தான் இருக்கும். இப்போது வியாழன் கோள் அருகிலேயே வெள்ளி காணப்படுகிறது.

எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் வெள்ளி, வியாழன் ஆகிய கோள்கள் சித்திரை நட்சத்திரமும், பிறைநிலவும் அருகருகே காணப்படும். இவை அனைத்தும் அருகருகே இருப்பதுபோல பார்வைக்குத் தெரிந்தாலும் இவற்றுக்கிடையே தூரம் பல கோடி கிலோமீற்றராகும்.

பூமியிலிருந்து சந்திரன் சுமார் 3 லட்சத்து 52 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் இருக்கும். வெள்ளி 17 கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. வியாழன் 85 கோடி கிலோமீற்றர் தொலைவிலும், சித்திரை நட்சத்திரம் 260 ஒளி ஆண்டு தூரத்திலும் உள்ளது. ஒரு ஒளி ஆண்டு என்பது 9 லட்சம் கோடி கிலோமீற்றராகும் என அவர் தெரிவித்தார்.

தாய்வானுக்கு ஆயுத உதவி வழங்கும்

# அமெரிக்காவின் திட்டத்திற்கு சீன அரசாங்கம் கடும் எதிர்ப்பு!

பீஜிங் —

தாய்வானுக்கு எந்த நாடும் ஏவுகணைகளை கொடுத்து உதவக்கூடாது என்றும், அப்படி தாய்வானுக்கு உதவுவதை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம் என்றும் சீனா கூறியுள்ளது.

சீனா அருகே உள்ள தனித்தீவு தாய்வான். அங்கு தனியாக ஒரு அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. தாய்வானை தனிநாடாக ஏற்க சீனா மறுத்து வருகிறது. சீனாவுடன் அது இணைந்து விடவேண்டும் என்றும் அது கூறிவருகிறது.

தாய்வான் மீது சீனா படையெடுத்து அதைக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்றும் அஞ்சப்படுகிறது. இதனால் தாய்வானுக்கு பட்ரியாட் ஏவுகணைகளை 2001 ஆம் ஆண்டு விற்க அமெரிக்க முன்வந்தது.


நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்து தாக்கி அழிக்கக் கூடிய ஏவுகணைகளையும், நீர்மூழ்கிக் கப்பலையும் அமெரிக்கா வழங்க ஒப்புக் கொண்டது.

இது சீனாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் சீனா மறைமுகமாக அமெரிக்காவின் பெயரைக் குறிப்பிடாமல் மிரட்டலை விடுத்துள்ளது. தாய்வானுக்குகு எந்த நாடு பாதுகாப்பு அளித்தாலும், உதவி செய்தாலும் அதைக் கடுமையாக எதிர்ப்போம் என்று சீன அமைச்சரவை கூறியுள்ளது.

சீன ஜனாதிபதி ஹியூஜின்டாவோ இன்னும் ஒரு சில நாட்களில் அமெரிக்கா செல்ல இருக்கும் நிலையில் சீனா இவ்வாறு ஒரு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

ஒரே சீனா கொள்கையின் படி சீனாவை அங்கீகரித்திருக்கும் அமெரிக்கா தாய்வானை அங்கீகரிக்கவில்லை. தாய்வானை நோக்கி, 700 ஏவுகணைகளை சீனா நிறுத்திவைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# செவ்வாய் கிரகத்திலுள்ள ஸ்பிரிட் பூமிக்குப் படங்களை அனுப்பியது!



வொஷிங்ரன் —

செவ்வாய்க்கிரகத்தின் மலைச் சிகரத்தில் எடுத்த மேலும் சில படங்களை ஸ்பிரிட் விண்கலம் பூமிக்கு அனுப்பியுள்ளது.

அமெரிக்காவின் நாஸா நிறுவனம் செவ்வாய் கிரக ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

செவ்வாய் கிரகத்துக்கு நாஸா அனுப்பிய ரோவர் ஸ்பிரிட் என்ற விண்கலம் கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த ரோபாட்டிக் கலன் செவ்வாய்க் கிரகத்திலுள்ள ஹஸ்பண்ட் ஹில்ஸ் என்ற மலைச் சிகரத்தின் மீது வெற்றிகரமாக ஏறியது. 14 மாதங்களில் இந்தச் சிகரத்தில் ஏறிமுடித்த ஸ்பிரிட் கலன் அந்த மலைச் சிகரத்தின் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது. இந்தப் பகுதி முன்பு ஏரிகள் நிறைந்த பகுதியாக இருந்திருக்கலாம் என்றும் அந்தப் படங்கள் மூலம் நிபுணர்களுக்குத் தெரியவந்துள்ளது.

சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படும் செவ்வாயில் உள்ள ஒரு மலைக்கு கொலம்பியா என்று பெயரிடப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான அமெரிக்க ரொக்கெட்டின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கொலம்பிய ரொக்கெட் விபத்தில் பலியான ஒரு நிபுணரின் பெயர் ரிக் ஹஸ்பெண்ட் அவரது நினைவாக ஹஸ்பெண்ட் என்று மலைச் சிகரத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

# கத்ரீனா புயலில் சிக்கி 4 000 பேர்வரை பலி!

நியூஆர்லியன்ஸ் —

அமெரிக்காவில் புளோரிடா, லூசியானா, அலாபா, மிசிசிப்பி ஆகிய மாகாணங்களைக் கத்ரீனா என்ற புயல் தாக்கியது. வரலாறு காணாத இந்தப் புயலில் ஆயிரக்கணக்கான நகரங்கள் சின்னாபின்னமாகிவிட்டன. கடல்நீர் தடுப்புச்சுவர்களை உடைத்துக்கொண்டு ஊருக்குள் புகுந்ததால் ஏராளமான நகரங்கள் தண்ணீரில் மூழ்கின.

இந்தப் புயலுக்கு 2 ஆயிரம் பேர் பலியாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டாலும், அதன் எண்ணிக்கை 4 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று தெரிகிறது.

புயல் பாதித்த பகுதிகளில் உணவு, தண்ணீரின்றி லட்சக்கணக்கானவர்கள் தவிக்கிறார்கள். எங்கும் பிணக் குவியல் காட்சியளிக்கிறது. தொற்று நோய்களும் பரவுகிறது.

லூசியானாவில் புயல் தாக்கிய பகுதியிலுள்ள ஒரு ரசாயன ஆலை வெடித்தது. இதில் இருந்து விஷவாயு கசிந்து நகர் முழுவதும் பரவியது. இதனால் ஏற்கனவே வீடு வாசல்களை இழந்து தவிக்கும் ஆயிரக் கணக்கானவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இதற்கிடையில் புயலால் சேதமடைந்த பகுதிகளில் திருட்டுக்கள் நடைபெற்று வருகிறது. சட்டம் ஒழுங்கு முற்றிலுமாகச் சீரழிந்து காணப்படுகிறது.



அமெரிக்காவில் - கத்ரீனா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மைதானமொன்றில் கட்டில்கள் போடப்பட்டிருக்கும் காட்சி.


## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பார்த்தீப வருடம் ஆவணிமாதம் 20 ஆம் நாள் (05.09.2005) திங்கட்கிழமை காலை 09.10 மணி முதல் 10.32 மணிவரையுள்ள உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

**செல்வி தேவசுகன்ஜா**

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா செய்ய இறைவன் அருள்கூடி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
கெ.சண்முகலிங்கம் (அப்புக்குட்டி) மணிமேகலா
குடும்பத்தினர்

310, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(2037)



## தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம் - 01.09.2005

## கிளிநொச்சி மாவட்டம்

மேற்படி பிரகடன நிகழ்வு எமது மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று நிறைவு பெற்றுள் ளது.

இந்தத் தேசிய செயற்பாட்டின் போது அதன் ஒவ்வொரு நிலைகளிலும் உணர்வோடும், தேசிய உரிமையோடும் பங்காற்றி தங்களின் தேசியக் கடமையை நிறைவு செய்தமைக்காக மாவட்ட தமிழ்த் தேசிய ஒருங்கிணைப்புச் செயலணி என்ற வகையில் உங்கள் ஒவ்வொருவரையும் மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணி நன்றியுணர்வோடு பற்றிக் கொள்கிறது.

தங்களின் தமிழ்த்தேசியப் பணி தொடரட்டும்

**தமிழீழமே எங்கள் மூச்சு!**

நன்றி.

தலைவர்,
தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணி,
கிளிநொச்சி மாவட்டம்.

செயலாளர்,
தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணி,
கிளிநொச்சி மாவட்டம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# ஐ.நா.வின் சிறப்புத் தூதர் இலங்கை வந்தடைந்தார்!

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரையும் சந்திப்பார்

கொழும்பு -

இலங்கைத் தீவில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள போர்நிறுத்த ஒப்பந்த சூழல் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனானின் சிறப்புத் தூதுவர் லக்டார் பிராகமி நேற்று முன்தினம் இரவு கொழும்பு வந்தடைந்தார்.

ஐந்து நாள் பயணமாக இலங்கை வந்துள்ள அவர் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அரசியல் தலைவர்கள், அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட பின்னர் இலங்கைக்கு வருகை தரும் முதலாவது உயர்நிலை அதிகாரி இவராவார்.

ஐ.நா. சிறப்புத் தூதரின் ஏனைய பயண விபரங்களை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கிமாலி அருணா திலக்க தெரிவிக்க மறுத்துவிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சீனாவிலிருந்து நாடு திரும்பிய பின்னரே லக்டார் பிராகமியின் பயணங்கள் இறுதி செய்யப்படும்.

லக்டார் பிராகமி ஆப்கான் பிரச்சினையிலும் ஐ.நா.சபையின் சிறப்புத் தூதுவராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து ஆய்வு செய்ய இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா. சிறப்புத் தூதுவர் லக்டார் பிராகமி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி அல்லது 7 ஆம் திகதி நடைபெறக் கூடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சந்திப்பின் போது மூன்று ஆண்டுகால போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமும் தமிழ் மக்களின் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்படாதது.

இதனால் தமிழ் மக்கள் விரக்தி நிலையில் - சமாதான முயற்சிகளின் முழு அளவில் நம்பிக்கையற்று இருப்பது - இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களை அரசு உருவாக்கி, போர்நிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் வகையில் விடுதலைப் புலிகளை படுகொலை செய்து வருவது - திருமலை புத்தர் சிலை - தமிழ் மக்களின் இயல்புவாழ்க்கையை சீர்குலைக்கும் சிங்களப் பேரினவாத நடவடிக்கைகளுக்கு இராணுவமும் பொலிஸாரும் ஒத்துழைப்பு அளித்து வருவது - உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழரின் வாழ்விடங்களில் இன்னமும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சிங்கள இராணுவ முகாம்களால் கடற்றொழில், நெற்செய்கை உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் முடக்கப்பட்டிருப்பது உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஐ.நா. சிறப்புத் தூதரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விளக்கிக்கூற விருப்பதாகவும் -

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையிலான வவுனியா, கிளிநொச்சி பிரகடனங்களும் ஐ.நா. சிறப்புத் தூதரிடம் கையளிக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மகிந்தவின்...

பெண் - தான் கற்பிட்டியைச் சேர்ந்தவர் என்று கூறினாலும் அவர் கொழும்பைச் சேர்ந்தவர் என இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் மேலதிக பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அழககோன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து முக்கிய அரசியல் தலைவர்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மகிந்த ராஜபக்ஷவும், சில பொதுக்கூட்டங்களை ரத்துச் செய்துள்ளதாகவும் - சுதந்திரக் கட்சியினர் தெரிவித்தனர்.

### நோர்வேயில்...

இலங்கை தொடர்பான கொள்கையில் மாற்றம் இருக்காது. ஏனெனில், நோர்வேயில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இலங்கைக்கான மத்தியஸ்தத்தை ஆதரிக்கின்றன.

பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற இருப்பதால் நோர்வே வெளியுறவு அமைச்சரோ அல்லது பிரதி வெளியுறவு அமைச்சரோ இலங்கைக்கு வருவது சாத்தியமில்லை. அரசு புலிகள் நேரடிப்பேச்சுக்கான இடத்தை தெரிவு செய்வதில் உள்ள முரண்பாட்டை நீக்க நோர்வே தொடர்ந்தும் முயற்சித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மலையகத்தின்...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வுடன் அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமரின் செயலாளர் லிசில் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மலையகத்தில் தான் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் - பிரதமருக்கு தொண்டமான் விளக்கினார். அத்துடன், மலையக மக்களின் ஆதரவிற்கு உதவ வேண்டுமெனில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனின் உதவியைப் பெறக்கூடாது. சதாசிவத்தை சேர்த்துக்கொள்ளக் கூடாது. மலையக மக்களின் ஏகபிரதிநிதியாக தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தொண்டமான் - பிர தமரிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு நடந்த மறுநாள் தொண்டமான் இந்தியாவுக்குப் பயணமானார். அங்கு தங்கியிருந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

### பேச்சுக்களுக்கான...

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற போது நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து கிடந்தது.

நாட்டிலும் கட்சியிலும் வலுவான தலைமை இல்லாத சூழலிலேயே நான் தலைமைப் பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஜே.வி.பி உள்ளிட்ட ஆயுதக் குழுக்களாலும் இனப்பிரச்சினையாலும் வன்முறைகள் வெடித்துக்கொண்டிருந்தன.

எமது சுதந்திரக் கட்சியின் தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று நான் கட்சியின் தலைமைப் பொறுப்பேற்க இணங்கினேன்.

தற்போது சட்டம் ஒழுங்கையும் ஜனநாயகத்தையும் நான் மீட்டெடுத்துள்ளேன். அமைதி முயற்சிகளில் முழுமையான வெற்றியை நான் பெறவில்லை என்பதே எனது வருத்தம். இருப்பினும், இப்போதும் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் பேச்சுக்களுக்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன.

தற்போதும் கூட பெரும்பான்மையான ஊடகங்கள் நாட்டின் அரச தலைவருக்கு எதிரான அவதூறு பிரச்சாரங்களையே மேற்கொண்டு வருகின்றன.

இன்னும் மூன்று மாதங்களில் எனது பதவிக்காலம் முடிகிறது. அதற்குப் பின்னரும் நான் தொடர்ந்து அரசியலில் இருக்க வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர்.

ஒருவேளை அவர்களது சொந்தக் காரணங்களுக்காகவும் இந்த விருப்பத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### நோர்வே...

எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளராக பாலசிங்கம் யோகராஜவும் போட்டியிடவுள்ளமை படிநிலை வளர்ச்சியாகும்.

### கட்டுநாயக்கவை...

இலங்கை விமானப்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பல தமிழ் அதிகாரிகளை விடுதலைப்புலிகள் பயிற்சியாளர்களாக பல வழிகளிலும் இணைத்துக் கொண்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது என அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### அலரிமாளிகைக்கு...

பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் அலரி மாளிகைக்கு இலக்கத்தகடற்ற வாகனமொன்றில் சென்றனர்.

இவர்கள் இந்த வாகனத்தில் சென்றமை அலரிமாளிகையின் பாதுகாப்பு பிரிவின் குறிப்பு புத்தகத்தில் இடம்பெறாமல் தடுப்பதற்காகவே எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் மங்கள சமரவீர குழுவினருடன் இரவு 11.45 மணிவரை கலந்துரையாடினர் இந்தப் பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த தகவலை எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 54ஆவது வருடாந்த மாநாடுவரை இரகசியமாக வைத்திருப்பதெனவும், தீர்மானிக்கப்பட்டதாக அந்தப் பத்திரிகை தெரிவித்தது. (தே)

### உடனடியாக...

கண்காணிப் புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ் டோட் ரயர் கருத்துத் தெரிவிக்கையில் -

சமாதானப் பேச்சுக்களுக்கு இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்து எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எப்படியிருந்தபோதிலும் துரதிஷ்டவசமாக பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான இடம் மற்றும் நேரம் குறித்து இணக்கப்பாடு காணப்படாதது எமக்கு வருத்தத்தைத் தருகிறது.

எமது நிலைப்பாட்டின்படி சமாதானப் பேச்சு உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். கடந்த சில மாதங்களாக இடம்பெற்றுவரும் கொலைகள் - சமாதானப் பேச்சுக்களின் சூழ நிலையைப் பாதிக்கின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### சுதந்திரக் கட்சியின்...

தீர்மானங்களுக்கு முரணாக ஜே.வி.பியுடன் கூட்டணி சேர முற்பட்டது குறித்து பிரதமர் மஹிந்தராஜபக்ஷ மீது ஜனாதிபதி சந்திரிகா விசனமுற்றிருப்பதாக தெரிய வருகிறது.

இந்த அரசியல் சூழ்நிலை தொடர்பாக விவாதிக்கவே கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா இன்று மாலை 4 மணிக்கு கூட்டவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் மஹிந்தராஜபக்ஷவின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளன.

நிபந்தனைகளுடன் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி ஆதரவு வழங்க முன்வந்துள்ளமையை ஜனாதிபதி சந்திரிகா கடுமையாக எதிர்ப்பதாகவும் -

நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்தால், இது பற்றி பரிசீலிக்க தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இன்று நடைபெறவுள்ள நிறைவேற்றுக்குழுக்கூட்டத்தில் இது தொடர்பாக சந்திரிகா முக்கிய முடிவுகளை அறிவிக்கலாம் என்றும் தெரியவருகிறது.

எதிர்வரும் செவ்வாயன்று கட்சியின் 54 ஆவது பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் அவசர அவசரமாக இன்று நிறைவேற்றுக் குழுக்கூட்டம் கூட்டப்படுவது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் தீவிரமான உட்பூசல்களை வெளிப்படுத்துவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

### துணைப்படைகளின்...

இளந்திரையனுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் தலைமை அதிகாரி மைக்சொரன் சன், மட்டக்களப்பு மாவட்ட துணை தலைமைப் பணிப்பாளர் டொமிலெக் மியர், மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப் புக்குழு வின் பதில் பணிப்பாளர் எரிசபெத் ஆகியோருக்குமிடையில் இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை 8.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட சமாதான இணைப்பாளர் மனோஜும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்புத் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நிறுவி வரும் காவலரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் மக்கள் துன்புறுத்தலுக்குள்ளாகும் நிலைமை பற்றியும், மற்றும் விடுதலைப்புலிப் போராளிகள் அரச தரப்பால் நடத்தப்படும் அல்லது நோக்கப்படும் விதம் பற்றியும் நாம் அவர்களுக்கு எடுத்துரைத்தோம்.

அத்துடன், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களில் உள்ள இராணுவ காவலரண்களில் நிரந்தரமான கண்காணிப்பாளரை நிறுத்துவதற்கான கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளோம்.

மக்கள் - விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்துக்களை வெளியிட முனையும் வேளைகளில் இராணுவத்தால் பழிவாங்கப்படும் நிலை தோன்றியுள்ளது . இந்த அச்சத்தால் எங்களிடமும் முறைப்பாடுகளைச் செய்கின்றனர்.

யுத்தம் தொடங்கினால் உங்களை ஒரு கைபார்ப்போம் என விசேட அதிரடிப்படையினர் அச்சுறுத்தி வருவதாகவும், எங்களிடம் முறையிடும் நிலையில் அது தொடர்பாக கவனம் எடுக்குமாறும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விளக்கியுள்ளதோடு. படைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் அரசியல் சந்திப்புக்களுக்கு விசேட அதிரடிப் படையினர் மறைமுகமாகவும் நேரடியாகவும் குழப்பம் விளைவித்து வருகின்றனர். இது பற்றியும் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளோம்.

தற்போது விடுதலைப்புலிகள் கண்ணியமான முறையில் கடைப்பிடித்து வரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி, அரசியல் சந்திப்புக்களை மேற்கொள்கின்றபோது படைத்தரப்புக்கு பாதகமான நிலை ஏற்பட்டால் அதை உத்தியோக பூர்வமாக புலிகளின் சமாதான செயலகத்துக்கு இதுவரை அறிவிக்காதது ஏன்? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளோம்.

துணைப்படைகளின் இருப்பும், அவர்களின் ஆயுதச் செயற்பாடுகளும் தான் தற்போதைய அமைதி முயற்சிகளின் முக்கிய எதிரிகள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தும் முழுப்பொறுப்பும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கே உள்ளது என்பதை வலியுறுத்தினோம். இது தொடர்பாக மீண்டும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் கண்காணிப்புக்குழுவினர் குறிப்பிட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

Dialog Mobitel GSM SIM
போட்டோ பிரதி, நெற்போன், உள்ளூர் - வெளியூர் அழைப்புக்கள், கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ளலாம்
எமது நீண்டகால சேவையில் இவ்வாரம் மேலும் விசேட சலுகைக் கட்டணத்தில் அனைத்து சேவைகளும்
சிற்றி தொலைத் தொடர்பு சேவை
இல 11, சேர்பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
[C/4394]



## மரண அறிவித்தல்

### நாகமுத்து பரராஜசிங்கம் (சொக்கர்)

*(முன்னாள் திருமலை வர்த்தகர்)*

முன்னாள் திருமலை வர்த்தகர் நாகமுத்து பரராஜசிங்கம் (சொக்கர்) புங்குடுதீவு மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நாகமுத்து பரராஜசிங்கம் 02.09.2005அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருகோணமலை முன்னைநாள் வர்த்தகரும், சமூக சேவையாளரும் ஆவர். காலம் சென்றவர்களான நாகமுத்து செல்லமுத்து தம்பதிகளின் புதல்வரும், தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகலிங்கம் (தலைவர் புங்குடு தீவு, நயினாதீவு ப.நோ.கூ.ச), பாலசரஸ்வதி (கொழும்பு), பாலசுலோ சனா(கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன் BACC.Hons (G.A.கனடா), நிதீஸ்வரன் (கனடா), நதீஸ்வரன் (கனடா), பாணுரேகா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகேஸ்வரி, நவரெத்தினசிங்கம்(கொழும்பு), தவேந்திரராசா (கனடா), அல்லி (கனடா), ஸ்ரீதேவி(கனடா), ரூபிகா (கனடா), ரமணன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்றவர்களான கையிலாயநாதர், இராமலிங்கம், செல்லம்மா, கண்மணி, உலகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலியுகா (பிரான்ஸ்), கமல், நிர்மல், விமல் (பிரான்ஸ்), வித்தியா, விதுனா, தனுசியா, சிந்து, கௌசிகன், யமி, அனீரா, அஜன், நிதீசன், நிதீசா, றுனீஸ்சன், அபினிசா ஆகியோரின் அன்புப் பேரனும் கனகம்மா, செல்லத்துரை, நமசிவாயம், இராசம்மா, சின்னத்தங்கம், கந்தையா, பொன்னாச்சி, சபாரெத்தினம், புஸ்பவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 06.09.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ப.கனகலிங்கம்,(மகன்)
தலைவர்,
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
புங்குடுதீவு - நயினாதீவு பல நோ.கூ. சங்கம்.

21. ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
கை.தொலைபேசி : 077-6201567.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.